# திருவானைக்கா
# ஆத்மசோதி குறியீடும்
# ஆடுபுலி விளையாட்டும்



தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்
சு. சந்திரா அனிதாகுமார்

# திருவானைக்கா
# ஆத்மசோதி குறியீடும்
# ஆடுபுலி விளையாட்டும்



நூலாசிரியர்கள்

தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்

சு. சந்திரா      அனிதா குமார்

# நூல் குறிப்புக்கள்


தலைப்பு : திருவானைக்கா ஆ த்மசோதி குறியீடும் ஆடுபுலி விளையாட்டும்

தன்மை : பழந்தமிழர் வாழ்வியல்

உரிமை : தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்

முதல் பதிப்பு : *2004*

இரண்டாம் பதிப்பு : *2022*

பக்கங்கள் : *68*

விலை : ரூபாய் 80/=

அச்சிட்டோர் : திருச்சி பிரிண்டிங் ஹவுஸ்

ரேஸ் கோர்ஸ் ரோடு, திருச்சி *620 023*

வெளியீடு : தொ(ல்)லியல் ஆய்வு மையம்,

**சந்திரா போஸ் அறக்கட்டளை,**

*3/43.*பி. புது ரெட்டித் தெரு, பீமநகர்,

திருச்சிராப்பள்ளி *620 001.*

பதிவு எண்: *4/94/2015*

கைப்பேசி எண்: *9750894532, 9080650420.*

மின்னஞ்சல்:archaeosymbolist@gmail.com

அட்டைப்படம் வடிவமைப்பு தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்

# சமர்ப்பனம்

இறைவனடிச் சேர்ந்த எனது தாயாரும் தந்தையும், எனது மாமியாரும் மாமனாரும், எனது பாட்டியும் தாத்தாவுமான லெ.வாலாம்பாள் அம்மாள், ம.லெக்குமணன் ஆகிய இருவரின் நினைவாகத் திருவானைக்கா ஆத்மசோதி குறியீடும் ஆடுபுலி விளையாட்டும் என்னும் இந்நூலைத் தமிழ் கூறும் நல்லுலகுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்,

சு. சந்திரா,

அனிதா குமார்.



முனைவர் ஆ.மணவழகன்

இணைப்பேராசிரியர்,

சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலம்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

தரமணி,சென்னை-600 113

# வாழ்த்துரை

உலகின் மூத்த குடியான தமிழ்க்குடியின் நிலங்களெங்கும் சிதைந்து கிடப்பவை வெறும் கட்டடக் குவியல்கள் அல்ல, அவை தமிழ்ச் சமூக வரலாற்றின் எச்சங்கள். ஆங்காங்கே பாறைகளின் இடுக்குகளிலும் கோயில்களின் இருண்ட பகுதிகளிலும் மறைந்திருக்கும் கோடுகள் வெறும் கிறுக்கல்கள் அல்ல, அவை மனிதகுல வாழ்வியல் செல்நெறிகளின் அடையாளக் குறியீடுகள்.

ஒரு பொருள், மற்றொரு பொருளை-பொருண்மையைத் தாங்கி நிற்றல் குறியீடு எனப்படுகிறது. குறியீடுகள் என்றும் கவனத்தை ஈர்ப்பவை. விளக்கங்களுக்கும் விவாதங்களுக்கும் இடமளிப்பவை. அதனாலேயே குறியீடுகள் குறித்த ஆய்வுகளும் கவனத்தை ஈர்ப்பனவாகவே உள்ளன.

குறியீடுகள் குறித்த ஆய்வுகளில் தன்னை இணைத்துக் கொண்டு, அதில் தொடர்ந்து பயணிக்கும் ஆய்வாளர் ஒருசிலருள் ஐயா தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் அவர்களும் ஒருவர்.

தொடர்ந்து குறியீடுகள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுவது, அவற்றை நூலாக்கம் செய்வது, ஆவணப்படுத்துவது எனச் சிறந்த பணிகளைச் செவ்வனே செய்து வருபவர்.

பொறியியலாளரான இவர், தனிப்பட்ட ஆர்வம் காரணமாக இன்று குறியீட்டாய்வாளராக அறியப்படுகிறார். கல்வெட்டு, பாறை மற்றும் குகை

ஓவியங்களில் உள்ள குறியீடுகள், வரிவடிவங்கள், கோயில்கள் மற்றும் சிற்பங்களில் காணப்படும் குறியீடுகளை ஆய்வு செய்து சான்றுகளுடன் விளக்குவதில் தனியிடம் பெற்றவர்.

அந்தவகையில் இவர் உருவாக்கிய **திருவானைக்கா ஆத்மசோதி குறியீடும் ஆடுபுலி விளையாட்டும்** என்ற இந்நூல், தற்போது இரண்டாம் பதிப்பாக வெளிவருவதில் மகிழ்ச்சி.

இந்நூலில் திருவானைக்கா கோயிலின் ஆத்மசோதி குறியீட்டை ஆடுபுலி விளையாட்டின் குறியீட்டுடன் ஒப்பிடுகிறார்.

**முன்னுரையில்** குறியீடு குறித்த விளக்கமளித்து, ஆய்வாளர்களின் வருகைக்காகக் காத்திருக்கும் தப்பிப்பிழைத்த பாறை ஓவியங்களையும் அருங்காட்சியங்களில் உள்ள குறியீடுகள் குறித்துமான தனது கவலையைப் பதிவு செய்து, தன் அடியொற்றித் தொடர்ந்துவரும் ஆய்வாளர்களுக்கும் வழிகாட்டுகிறார்.

**திருக்கோயில் சென்றுவருவதன் தத்துவம்** என்ற பகுதியில் பரமதரிசனக் குறியீட்டை விளக்கியுள்ளார். தன்னுணர்ந்து இறைவனை தரிசிக்க வேண்டும் என்ற விதிமுறையை உணர்த்துவதே பரமதரிசனக் குறியீட்டின் தத்துவம், பூசைகள் செய்வதாலும் யாகங்கள் செய்வதாலும் இறைவனை மகிழ்வித்து வீடுபேறு அடைய முடியாது என்பதையும் எடுத்துக்கூறியுள்ளார்.

**திருவானைக்கா திருக்கோயில்** பகுதியில் அக்கோயில் அமைந்துள்ள இடம், கோயிலின் வரலாற்றுச் சிறப்புகள், சிவப்பெருமனை ஒன்பது கட்டங்கள் வழி கண்டு வணங்குவதன் உட்பொருள், அன்னை அகிலாண்டநாயகியின் சிறப்பு ஆகியவற்றை விளக்கியுள்ளார்.

அவ்வாறு விளக்கும்போது, தேவைப்படுமிடங்களில் பல்வகைத் தரவுகளைக் கொண்டு விளக்கியுள்ளமை அவர் கூறும் செய்திகளுக்கு மேலும் வலுசேர்ப்பனவாக உள்ளன.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

கோயிலின் பெயர்க்காரணச் சிறப்புகளை விவரிக்குமிடத்து அதற்கானச் சான்றுகளாக விளங்கும் கல்தூண்கள், வரைப்படக் குறியீடுகள் மற்றும் கல்வெட்டுச் செய்திகளை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளமை இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

அடுத்து அமைந்துள்ள **திருவானைக்கா ஆத்மசோதி குறியீடு** என்பதில் திருக்கோபுரத்தின் முதலாவது நிலைக்கால் படியின் மேல் பகுதியில் இடம்பெற்றுள்ள ஆத்மசோதி குறியீட்டைப் பகுதி பகுதியாக விளக்கியுள்ளார்.

அக்குறியீட்டைச் சுற்றியுள்ள பத்து சோதிகள், ஐந்துகோசங்கள், ஈப்புலி என்னும் ஆடுபுலிவிளையாட்டுக் குறியீடு, பத்துக்கோடுகள், பதினாறு பகுதிகள், சோதிக்குள் சோதி, பரமாத்மாவும் சீவாத்மாவும் பறவையின் வடிவங்களே என்று அவர் ஆத்மசோதி குறியீட்டை விரிவாக விளக்கியுள்ளது சிறப்பு. பரமாத்மாவும் சீவாத்மாவும் பறவையின் வடிவங்களே என்றும், திருமந்திரம், முண்டகா உபநிடதம், கைவல்லிய நவநீதம் ஆகியவற்றிலிருந்து சான்றுகள் காட்டியும், கற்பனையாகக் கதை ஒன்றை எடுத்துக்காட்டியும் வலுசேர்த்துள்ளார்.

**ஆடுபுலி விளையாட்டும் ஆய்வும்** என்ற பகுதியில் ஆடுபுலி விளையாட்டிற்கான குறியீட்டில் மறைந்துள்ள தத்துவங்கள், விளையாட்டின் உட்பொருள் குறித்து விரிவாக ஆய்வு செய்துள்ளார்.

**மனமும் புத்தியும்** என்ற அடுத்த பகுதியில் ஐந்தறிவுகளின் தூண்டுதலால் வாழாமல் மனமகிழ்ச்சியுடன் வாழ மனத்தையும் புத்தியையும் ஒருங்கிணைந்து வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

அடுத்த பகுதியில் **அறியாமையை** திருமந்திரம், பிருஹதாரண்யக உபநிடதம், ஈசாவாஸய உபநிடதம் முதலியற்றிலிருந்து சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார்.

**சிவப் பரம்பொருளே ஞான குரு** என்ற அடுத்த பகுதியில் சிவப் பரம்பொருளே வாக்கும் மனமும் கடந்து நிற்கின்ற தலைவன் என்பதை எடுத்துக்காட்டிள்ளார்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

**பரம்மஞானி** என்ற தலைப்பில் யார் பரம்மஞானி என்பதை விளக்கியுள்ளார். பிறநாடுகளில் காணப்படும் குறியீடுகள் மற்றும் பாறை ஓவியங்கள் குறித்து இவர் மேற்கொண்ட ஆய்வின் விளைவாக அறிந்த **மெக்சிகன் குறியீடு** குறித்து அடுத்தப் பகுதியில் விவரித்துள்ளார்.

நிறைவாகப் **பழந்தமிழர் வாழ்வியலை உலகறியச் செய்யவேண்டும்** என்ற தன் உட்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆத்மசோதி குறியீடும் ஆடுபுலிவிளையாட்டும் (2004), அகழாய்வுகள் காட்டும் தமிழக வரலாறு (2010), உருவதிகாரம் (2013), திருக்குறியீட்டியல் (திருக்கோயில் திருக்குறியீடுகள்) (2014), தொ(ல்)லியல் அந்தரங்கம் (2015), Kizhvali Rock Art (2016), Ancient Thamizh – The Faculty of Harappan Symbols and Sciripts (2018), சிந்து சமவெளி பழந்தமிழ் உயிருரு இலக்கணம் (2019), திருவெள்ளரை மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் அறிவியலும் ஆன்மிகமும் (2019), சிந்து சமவெளி முத்திரைகள் கூறும் அருள்மிகு சிவபெருமான் மகிமைகள் (2019), சிந்து சமவெளி முத்திரைகளும் பழந்தமிழ் குறியீடுகளும் எழுத்துக்களும் (2020), மற்றும் பீமநகர் அருள்மிகு செடல் மாரியம்மன் திருக்கோயில் சிறப்புக்கள் (2021) போன்ற இவரின் நூல்கள் வரிசையில் மேலும் பல நூல்கள் வெளிவந்து தமிழன்னைக்குச் சிறப்பு சேர்க்க வேண்டுமென விழைகிறேன்.

அன்பன்

முனைவர் ஆ.மணவழகன்

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# ஆசிரியர் உரை

*நம் பாரதத் தாயின் அழகிய முகம் போல இயற்கையின் வடிவம் கொண்ட தென்னகத்தின் ஓர் அங்கமான தமிழ்த் திருநாட்டின் தெய்வத் திருத்தலங்களின் நுழைவாயில்களான திருக்கோபுரங்களின் நிலைகால் படிகள், திருமண்டபங்கள், திருச்சுற்றுக்கள் ஆகியவற்றின் கற்தரையின் மேல் புறத்திலும், குடவரைகள் உள்ள பகுதிகளில் பாறைகளின் மேல் பரப்பிலும், நம் புறக்கண்களுக்கு நன்கு புலப்படும் படியாக ஏராளமான குறியீடுகள் பொறித்து வைக்கப்பட்டுள்ளன.*

*அக்குறியீடுகள் வேலையற்ற சோம்பேறிகளின் கிறுக்கல்கள் அல்ல என்பதும், அவை ஒவ்வொன்றும் நம் அகக்கண்களைத் திறக்கும் திறவு கோல்கள் என்பதும், அவற்றில் ஏராளமான ஆன்மிக தத்துவங்கள் உள்ளடங்கியுள்ளன என்பதும் யாம் ஆராய்ந்தறிந்தவை யாகும்.*

*அறிவு என்பது பிறருக்கு அறிவித்தால் மட்டுமே அறிவாகும். பிறருக்கு அறிவிக்காத அறிவு மிகவும் சிறந்ததாக இருந்தாலும் கூட அது அறிவாகாது என்பதன் அதனடிப்படையில் யாம் அறிந்தவற்றை தமிழ்கூறும் நல்லுலகுக்கு வழங்கவேண்டும் என்ற எண்ணத்தில் உருவான* ***திருவானைக்கா ஆத்மஜோதி குறியீடும் ஆடுபுலி விளையாட்டும்*** *என்றத் தலைப்புடைய இந்நூல் இரண்டாம் பதிப்பாகும்.*

*இந்நூலின் முதல் பதிப்பு* ***ஆத்மஜோதி குறியீடும் ஆடுபுலி விளையாட்டும்*** *என்றத் தலைப்பில் கோவை லலிதா புக்ஸ் நிறுவனத்தாரால் அச்சிடப்பட்டு, அந்நூலின் வெளியீட்டு விழா 2004- ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி ரம்யாஸ் ஹோட்டல் போர்டு அறையில் தலைமை சிற்பி சிவப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

கோவை, தவத்திரு ஸ்ரீஜெகநாதசுவாமிகளின் திருக்கரத்தால் குத்துவிளக்கு ஏற்றப்பட்டு, தமிழ் தாய் வாழ்த்துடன் துவங்கிய விழாவில் ஸ்தபதி இராமன் வரவேற்புரை வழங்கினார்.

தஞ்சை, முனைவர் குடவாயில் பாலசுப்புரமணியன் நூல் அறிமுக உரையாற்றினார்.

தவத்திரு ஸ்ரீஜெகநாதசுவாமிகள், ஜி.சுந்தரம் ஐயா ஆகியோர் ஆசி உரையாற்றினர். மங்களா செல்லத்துரை, முனைவர் இராசு பவுன்துறை, பேராசிரியர் இராசசேகர தங்கமணி, திருவானைக்கா இரவி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

காவல் துறை அதிகாரி ஐயா குமாரசாமி ஐ.பி.எஸ் அவர்களின் திருக்கரத்தால் நூல் வெளியிடப்பட்டு முதல் நூலை திருச்சி, விஸ்வநாதன் மருத்துவமனை நிறுவனர், தலைமை மருத்துவர் ஜெயபால் ஐயா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அவரை அடுத்து அரியூர் மணி, கூகூர் அங்குசாமி, இலால்குடி விட்டல் தாஸ், தவத்துறை ஆகியோர் நூல்களை பெற்றுக்கொண்டனர்.

சிறப்புரை வழங்கிய ஐயா குமாரசாமி ஐ.பி.எஸ் அவர்கள் நூலின் தன்மை, அதன் சிறப்பு ஆகியவற்றை விளக்கமாக எடுத்துரைத்து இந்நூல் ஒரு குன்றின் மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ள விளக்கு எனவும் அதன் ஒளி அனைவரின் அறியாமையை அகற்றி ஞானத்தை அளிக்கக் கூடியது எனவும் குறிப்பிட்டார்.

மேலும் நூலாசிரியரை தன் உள்ளம் கவர்ந்த கள்வன் என்றும் இவர் சும்மா இருக்க மாட்டார், மேலும் பல நூல்களை தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்குவார் எனக் குறிப்பிட்டார். நூலாசிரியர் சுபாஸ் சந்திர போஸ் ஏற்புரை வழங்கினார்.

இவ்விழாவில் நண்பர்கள், உற்றார் உறவினர்கள், ஆசிரியர்கள், அறிஞர் பெருமக்கள் என 51 பேர் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். அன்புச் சகோதரர் இரங்கநாதனின் இறைப் பாடலுடனும், தேசியக் கீதத்துடனும் நூல் வெளியீட்டு விழா இனிதே நிறைவடைந்தது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

எங்கள் ஆய்வுக்கு உதவி புரிந்த திருக்கோயில் நிர்வாக அதிகாரிகளுக்கும், அறங்காவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், அனைத்து நன்பர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய முனைவர் ஆ.மணவழகன் ஐயா அவர்களுக்கும், இந்நூலை செம்மைபடுத்த உதவிய அன்புச் சகோதரர், தமிழ்ச்செம்மல் மேட்டூர் அணை மா.பாண்டுரங்கன் அவர்களுக்கும், இந்நூலை அச்சிட்ட தி பிரிண்டிங் ஹவுஸ் நிறுவனத்திற்கும், இந்நூலை வெளியிட்ட சந்திரா போஸ் அறக்கட்டளை நிறுவனத்திற்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



இடமிருந்து வலமாக: தவத்திரு ஸ்ரீஜெகநாதசுவாமிகள், ஐயா சிவப்பிரகாசம், ஐயா குமாரசாமி ஐ.பி.எஸ், ஐயா ஜி.சுந்தரம், நுலாசிரியர், ஐயா மங்களா செல்லத்துரை, ஐயா மருத்துவர் ஜெயபால், தம்பி இரங்கநாதன் ஆகியோர்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| *01.00* | முன்னுரை | *12* |
| *02.00* | திருக்கோயில் சென்றுவருவதன் தத்துவம் | *15* |
| *03.00* | திருவானக்கா திருக்கோயில் | *18* |
| *04.00* | திருவானக்கா ஆத்மஜோதி குறியீடு | *22* |
| *05.00* | ஆடுபுலி விளையாட்டும் ஆய்வும் | *39* |
| *06.00* | மனமும் புத்தியும் | *45* |
| *07.00* | அறியாமை | *51* |
| *08.00* | சிவப் பரம்பொருளே ஞானகுரு | *56* |
| *09.00* | பரம்மஞானி | *59* |
| *10.00* | மெக்சிகன் குறியீடு | *61* |
| *11.00* | நிறைவுரை | *63* |
| *12.00* | துணை நூல்கள் | *68* |


© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# முன்னுரை

குறியீடுகள் அனைத்தும் பழங்காலத்தில் வாழ்ந்த ஆதி மனிதர்களால் வடிவமைக்கப்பட்டவை. குறியீடுகள் என்பதற்கு குறியாக இட்டாளும் பெயர்கள் எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

அத்தகையக் குறியீடுகள் உலகமெங்கும் காணப்படுகின்றன. அவற்றில் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை, வாழ்க்கைச் சூழ்நிலை, அவர்களின் அறிவின் முதிர்ச்சி, ஆன்மிக மார்க்கத்தில் சென்று அவர்கள் அறிந்த பல ஆன்மிக தத்துவங்கள் ( உண்மைகள் ) ஆகியவை பிரதிபளிக்கின்றன.

குறிகுறி யீடே வரைவென வாகி

அறிநிலை எழுதலின் எழுத்தெனப் படுமே - ஐந்திரம் 07

பொருள்: ஒன்றைக் குறித்து எழுதல், அடையாளமாக எழுதல், வரையப்படும் நிலையில் உருப்பெறுதல் என மூன்று நிலைகளில் புலனாகும் வண்ணம் எழுகின்ற காரணத்தால் எழுத்து என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

உலகின் பல பாகங்களில் வாழும் மக்களுடன் நாம் தொடர்பு கொள்வது குறியீடுகளின் அடிப்படையாகும்.

ஏனெனில் நாம் பேசும் மொழிகள், எழுதும் எழுத்துக்கள், வரையும் ஓவியங்கள், படைக்கும் கவிதைகள், பாடும் பாடல்கள் அனைத்தும் குறியீடுகளின் ஒட்டு மொத்தத் தொகுப்பாகும். அதுபோலவே நமது சிந்தனை, செயல், வாழ்க்கை, நாம் கற்பது, கேட்பது, உரைப்பது ஆகிய அனைத்துமே குறியீடுகளின் அடிப்படையே ஆகும்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

இத்தகையச் சிறப்புமிக்க குறியீடுகளின் உட்பொருளை மற்றவர்கள் புரிந்து கொள்ளும் வரை அவற்றிற்குச் சிறப்புண்டு.

எப்போது அவற்றின் உட்பொருள் மற்றவர்களுக்குப் புரியாமல் போகிறதோ அப்போது அக்குறியீடுகளின் சிறப்பும் மறைந்து போகும்.

நம் அனைவருக்கும் குறியீடுகளின் உட்பொருள் புரியாத காரணத்தால், அவை வரிசை எண்களோடு ஒரு காட்சிப்பொருளாகப் பல நாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் காட்சியளிக்கின்றன.

மேலும் பல குறியீடுகள் மலைக்குன்றுகளிலும், கற்பாறைகளிலும் காணப்படுகின்றன.

அதற்கு உதாரணமாக, பெரு நாட்டின் ஆண்டஸ் மலைப்பகுதியில் காணப்படும் நாஸ்கா வரைபடக் கோடுகளையும், சிந்து சமவெளி முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள பழந்தமிழ்க் குறியீடுகளையும் எழுத்துக்களையும், தமிழகத்தில் மேற்கொண்ட அகழாய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் பொறிக்கப்பட்டுள்ள கீறல் குறியீடுகளையும் சுட்டிக் காட்டலாம்.

பாறை ஓவியங்களாக வரையப்பட்டுள்ள குறியீடுகள் கருப்பு (20,000 ஆண்டுகள்), கருஞ்சிவப்பு (8,000 ஆண்டுகள்), வெள்ளை (4,000 ஆண்டுகள்) போன்ற மூவகை வண்ணங்களைக் கொண்டு வரையப்பட்டுள்ளன.

இவைகள் இயற்கையோடு போராடி ஒவ்வொரு நாளும் சிறுகச் சிறுக மங்கி மறைந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் பல ஓவியங்கள் பாறை உடைப்பவர்களின் அறியாமையால் சிதறுண்டும் போய்விட்டன.

அதிலிருந்து தப்பி பிழைத்தப் பாறை ஓவியங்களும், மற்றும் அருங்காட்சியகங்களில் உள்ள குறியீடுகளும் தம்மை பற்றி ஆய்வு மேற்கொள்ள வரும் ஆய்வு அறிஞர்களின் வருகைக்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின்றன.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

குறியீடுகளின் உட்பொருளை நம்மால் அறிய முடியாததால் இவை வேலையற்ற சோம்பேறிகளால் செதுக்கி வைக்கப்பட்ட வரைகோடுகள் என முடிவுக்கு நாம் வருவது முறையன்று.

ஏன் என்றால், நம் புறக்கண்களுக்கு நன்கு தெரியும்படி காணப்படுகின்ற இவை நமது அகக்கண்களைத் திறக்கும் திறவுகோல்கள் என்பதை நாம் அறியவேண்டும்.

இத்திறவுகோல்கள் தெய்வத் திருத்தலங்களின் நுழைவாயில்களான திருக்கோபுரங்களின் நிலைக்கால் படிகளிலும், திருச்சுற்றுக்களிலும், திருமண்டபங்களிலும், திருக்கோயிலிலுள்ள மூலத்தானம் என்னும் கருவறையின் நிலைக்கால் படிகளுக்கு முன்புறமுள்ள கற்தரையின் மேற்பகுதியிலும் பொறித்து வைக்கப்பட்டுள்ளன.

அத்தகைய குறியீடுகளில் **பரம்மதரிசனம்** என்னும் **தன்னுணர்தல்** குறியீடும், **ஈப்புலி** அல்லது பதினைந்தாம் புலி என்னும் ஆடுபுலி விளையாட்டிற்கான குறியீடும் குறிப்பிடத்தக்கவை.






திருச்சி மாவட்டம், அன்பில் பெருமாள் கோயில், திருப்பஞ்சீலி சிவன் கோயில் திருக்கோபுரங்களின் நிலைக்கால் படி பரம்மதரிசனம், ஈப்புலி குறியீடுகள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# திருக்கோயில் சென்றுவருவதன் தத்துவம்

நாம் அனுதினமும் திருக்கோயிலுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவன் இறைவியை வழிபாடு செய்து முடித்து மனநிறைவோடு இல்லம் திரும்புகிறோம். திருக்கோயிலுக்குச் செல்வது இறைவனிடம் நமக்கு இதுவேண்டும், அதுவேண்டும் என்று கேட்டபதற்காகவா செல்கிறோம் என்றால், அதற்காக இல்லை என்பதே பதில்.

பின் எதற்காக திருக்கோயிலுக்கு செல்கிறோம் என்பதை திருக்கோயில்களின் நுழைவாயிலான திருக்கோபுரங்களின் நிலைகால் படிகளில் பொறிக்கப்பட்டுள்ள குறியீடுகள் உணர்த்துகின்றன. அவற்றில் ஒன்றே **பரம்மதரிசனக்** (பரம்பொருள் தரிசனக்) **குறியீடு.**



பொதுவாகப் பரம்மதரிசனக் குறியீட்டின் நடுவில் ஒரு புள்ளி, அதனைச் சுற்றி ஒரு செவ்வகம், அதனைச் சுற்றி இரண்டாவதாக ஒரு செவ்வகம், அதனைச் சுற்றி மூன்றாவதாக ஒரு செவ்வகம், அதனைச் சுற்றி நான்காவதாக ஒரு வெளிச்சுற்று என நான்கு சுற்றுக்களையும் கூடுதலாகப் **பெருமுக்கல் சிவாலயத்தில்** பொறிக்கப்பட்டுள்ள பதினாறு சோதியின் வடிவங்களையும் காணலாம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய நான்கு புவியின் திசைகள் நோக்கும் கோடுகள் முதலாவது செவ்வகத்திலிருந்து வெளிப்படுவதைக் காணலாம்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*பரம்மதரிசனக் குறியீட்டின் உட்பொருளாவது, பரலோகத்தில் பரமனாகவும், தேவலோகத்தில் தேவர்களாகவும், பூலோகத்தில் மனித இனம் உட்பட அனைத்து சீவராசிகளாகவும், மலையாகவும், நீராகவும், வெளிலோகத்தில் பூதகணங்களாகவும் இறைவன் தம்மைத் தாமாகவே வியாபித்து கொண்டு அங்கு இங்கு என இல்லாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ளார்.*

*இறைவனாகிய பரம்பொருளும், இறைவியாகிய பராசக்தியும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டவர் அல்ல என்பதை* ***தன்னுணர்ந்து இறைவனை தரிசிக்க வேண்டும்*** *என்ற விதிமுறையை உணர்த்துவதே பரம்மதரிசன குறியீட்டின் தத்துவமும், திருக்கோயில் சென்று இறைவன் இறைவியை வணங்குவதன் உட்பொருளாகும்.*

*தன்னுளு மாகித் தரணி முழுதுங்கொண்(டு)*

*என்னுளு மாகி இடம்பெற நின்றவள்*

*மண்ணுளும் நீர்அனல் காலுளும் வான்உளும்*

*கண்ணுளும் மெய்யுளுங் காணலும் ஆமே - திருமந்திரம் 1351*

*பொருள்: உலகத்து உயிர்களை எல்லாம் தன்னுள்ளே கொண்டிருக்கும் தாயாகிய பராசக்தி என்னுள்ளம் கோயிலாகக் கொண்டு, அங்கே இடம் பெற்றிருந்தனள்.*

*என்னுள்ளம் இடம் கொண்ட இத்தேவியே மண்ணுள்ளேயும், நீரிலும், நெருப்பிலும், காற்றினுள்ளும், ஆகாயத்திலேயும் கலந்திருக்கின்றாள். அருள் வேண்டிப் பணிவார் கண்ணுள்ளும், உடம்புள்ளும் காணப்படுபவள் அன்னையே.*

*தன்னில் தன்னை அறியும் தலைமகன்*

*தன்னில் தன்னை அறியத் தலைப்படும்*

*தன்னில் தன்னைச் சார்கிலன் ஆகில்*

*தன்னில் தன்னையும் சார்தற்கு அரியவே -திருமந்திரம் 2349*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

**பொருள்:** தன் உள்ளத்துள்ளே பரம்பொருள் இருப்பதை தன்னுணர்ந்து அறிபவன், தானாகவே தனக்குள் அகக்கண் கொண்டு பார்த்து, அறியாமை முதலான மன அழுக்குகளை விலக்கிக் கொண்டு ஞானத்தை அறிய முயலுபவனே; போற்றுதலுக்குரிய உயர்ந்த தலைமைக்குரிய பேரருளானாவான்.

தன்னுள் தன்னை அறிய முயலும் அகநோக்கு - ஆன்மஞானம் பெற முயன்றதால், திருவருள் அவனில் வந்து பொருந்தும்; சிவஞானம் சித்தியாகும். ஆனால் தன்னுள் தன்னைக் கண்டுணரத் தவறியவன் தன்னுள் இருக்கும் பரம்பொருள் நினைவைச் சார்தலும் இயலாது.

அப்பரம்பொருளும் அத்தகைய சீவர்கள் சிந்தையில் சேரான். இறைவனைச் சேர முயல்வோரைச் சேர இறைவன் தானே முன்வருவான் என்பது கருத்து என்கிறார் திருமூலர்.

பூசைகள் செய்வதாலும், யாகங்கள் செய்வதாலும் தேவர்களை மட்டுமோ மகிழ்ச்சி அடையச் செய்யமுடியுமே தவிர, இறைவனை ஒருபோதும் மகிழ்ச்சி அடையச் செய்து, நிரந்தரமற்றதும், அழியக்கூடியதுமான மானுட உடலுடன் இறைநிலை (வீடுபேறு) அடைய இயலாது.

இறப்பு எய்திய பின்னரே ஓர் ஆன்மாவாகவும், தன்னந்தனியாகவும் சோதி வடிவமான இறைநிலை அடைய முடியும் என்பதே பதினாறு சோதிகள் சூழ்ந்த **பெருமுக்கல் பரம்மதரிசனக்** குறியீடு உணர்த்தும் தத்துவமாகும்.

மேற்கண்ட தத்துவங்களை (உண்மைகளை) தன்னுணர்ந்தால் மட்டுமே நமது வாழ்நாள் முழுவதும் **சீவ சீருளாக** வாழ முடியும் என்பதை உணர்த்துவதே திருக்கோயில் சென்றுவருவதன் தத்துவமாகும்.

எனவே தான், திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் **பழந்தமிழர் வாழ்வியல்** தத்துவங்களைப் போதிக்கும் கல்விச் சாலையாகவும், ஒருவரை ஒருவர் சந்தித்து வணங்கி நலம் விசாரிக்கும் ஒரு சமுதாயக் கூடமாகவும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர, கோயில்களை ஒரு வியாபாரக் கூடமாகவோ, கொள்கை பரப்புக் கூடமாகவோ பயன்படுத்தக் கூடாது என்றனர் நம் முன்னோர்கள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# திருவானைக்கா திருக்கோயில்

*திருச்சிராப்பள்ளி மாநகரத்தில் பாய்ந்தோடுவதும் தென்கங்கை, பொன்னிநதி என்றப் பெயர்கள் கொண்டதுமான காவேரி நதியின் வடக்கரையிலும், அதன் கிளை நதியான கொள்ளிட நதியின் தென்கரையிலும் அமைந்துள்ளதே திருவானைக்கா என்னும் திருக்கோயில்.*

*இத்திருக்கோயில், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தில்* **நீர் திருத்தலம்** *(அப்புத் திருத்தலம்) என்றும், அன்னை பார்வதிதேவி ஈசனிடம் உபதேசம் பெற்றதால்* **உபதேசத்தலம்** *என்றும், ஜெம்புநாத முனிவர் வழிபட்டு முக்தி அடைந்ததால்* **ஜெம்புநாதர் கோயில்** *என்றும் பலப் பெயர்களில் அழைக்கப்படுகிறது.*

*1800 ஆண்டுகளுக்கு முன்னர் கோச்செங்கணான் என்ற சோழ மன்னனால் கட்டப்பட்ட இத்திருக்கோயிலுக்கென்று ஒரு தலப்புராணம் உண்டு.*

*ஆதியில் இத்திருத்தலத்தில் மனிதர்களைத் தவிர யானை, சிலந்தி, மரம் ஆகிய மூன்றும் இறைவன், இறைவியை வணங்கி வழிபட்டு முக்தியடைந்த காரணத்தால் இத்திருத்தலம்* **திருவானைக்கா திருக்கோயில்** *என்ற ஒருக் காரணப் பெயராக விளங்கப்படுகிறது.*

*அதற்கான சான்றுகளாக திருச்சிராப்பள்ளி மாவட்டம் எட்டரை அகிலாண்டபுரம், கீழக்குறிச்சி ஆகிய இரண்டு கிராமங்களில் உள்ள வயல்வெளிகளில் நிறுவப்பட்டுள்ள பழங்காலக் கல்த்தூண்களை சுட்டிக்காட்டலாம்.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

எட்டரை கல்த்தூணில் சூலம், மரம், யானை, சிலந்தி, ஒன்பது கட்டங்கள் கொண்ட **பிதா** வரைப்படக் குறியீடு ஒன்றும், கல்வெட்டுச் செய்தியும் பொறிக்கப்பட்டுள்ளன. கீழக்குறிச்சி கல்தூணில் ஒன்பது கட்டங்களுக்கு பதிலாக நான்கு கட்டங்கள் கொண்ட **பரம்** என்பதைக் குறிக்கும் வரைப்படக் குறியீடு ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது.



## ஒன்பது கட்டங்கள் / துவாரங்கள்

ஒன்பது கட்டங்கள் கொண்ட வரைப்படக் குறியீட்டை **பிதா வரைப்படம்** என மயமதம் சுட்டிக்காட்டுகிறது. அந்த ஒன்பது கட்டங்களில் நடுகட்டத்தில் பிதாவாகிய சிவபெருமானும் மற்ற எட்டு கட்டங்களில் அவரது வெளிப்பாடுகளான பவ, சர்வ,உகர, உருத்திர, மகாதேவ,பீம, ஈசான மற்றும் பசுபதி ஆகியோர் குடிகொண்டுள்ளதாக மாமுனிவன் மயன் படைப்பான ஐந்திரம் கூறுகிறது.

**பிதா** என்றத் தமிழ்ச் சொல் **5500** ஆண்டுகளுக்கும் முற்பட்ட H-2084A&B என்ற சிந்து சமவெளி நாகரிக முத்திரை ஒன்றிலும் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பிதா என்பதற்கு பெருநாரை எனவும் பொருளுண்டு. சங்ககாலத்தைச் சேர்ந்த இசை நூல் ஒன்றின் பெயர் **பெருநாரை** என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருவானைக்கா திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை ஒன்பது துவாரங்கள் கொண்ட ஒரு சன்னல் வழியாக மட்டுமே சிவபெருமனை வணங்கும்படியாக அமைக்கப் பெற்றுள்ளதற்கு மற்றொரு உட்பொருளும் உண்டு.

மனித உடல் ஒன்பது வாயில்களை கொண்டது; அதாவது கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, மூக்கு இரண்டு, வாய் ஒன்று, குறி ஒன்று, மலவாய் ஒன்று என ஆக மொத்தம் ஒன்பது துவாரங்கள் உடையது.

ஒன்பது துவாரங்கள் கொண்ட இந்த பூத உடலுடன் இறைவனின் திருப்பாதத்தை சென்றடைய இயலாது.

உயிராகிய ஆன்மா உடலை விட்டுப் பிரியும் போது, உச்சந் தலையிலுள்ள பரம்மரந்திரம் அதாவது **இறைவழி** என்ற பத்தாவது துவாரத்தின் / வாசலின் வழியாக உயிரை வெளியேறினால் மட்டுமே இறைவனின் திருப்பாதத்தை அடைய முடியும் என்பதையும் உணர்த்துவதாகும்.

## அன்னை அகிலாண்ட நாயகி

திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பதியாகிய சிவப் பரம்பொருளின் சரிபாதியான சக்தி என்னும் அருள்மிகு அன்னை அகிலாண்ட நாயகியைப் பற்றி தலப்புராணம் ஒன்று கூறுவதாவது;

திருவானைக்கா கோயிலில் கன்னியாகவே இருந்து கண்ணுதலைப் பூசித்தவளே அன்னை அகிலாண்ட நாயகி. ஆதியில் அன்னை மிக உக்கிரமான சக்தியாக இருந்தாள்.

அதனால் பூசனை செய்வோரும் கூட கோயிலின் உள்ளே செல்லப் பயந்து வடதிசை வெளிக்கோபுர வாசலுக்கு அருகாமையிலேயே நின்று தினசரி பூசைகளை செய்து வருகின்றனர், இரவு நேரங்களில் திருச்சுற்றுக்குள் எவரும் தங்குவதில்லை என்றச் செய்தியைக் கேட்டறிந்த ஆதி சங்கர பகவத் பாதாச்சாரியார் மனம் துணிந்து ஒருநாள் இரவு ஆலயத்தின் வடக்குத் திருச்சுற்றிலேயே தங்கினார்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*அவர், துர்க்கையாக வெளிவந்து உலாவும் அன்னையின் அதிபயங்கர ரூபத்தை தரிசித்தார். அன்னையின் கோரமான உருவத்தை தயையுடைய கருணாமூர்த்தியாக்கி உலகுக்கு உதவி செய்ய எண்ணினார்.*

*அதிக சக்தியுடைய இரண்டு ஸ்ரீ சக்கரங்களை உருவாக்கி அதில் அன்னையின் அனைத்து தெய்வீக சக்திகளும் தன் தவ-வலிமையால் குடிபுகும்படி வேண்டினார்.*

*அன்னையும் ஆதி சங்கரரின் வேண்டுகோளுக்கு இணைங்கி தமது மூர்த்தி கரத்தை அந்த இரண்டு ஸ்ரீ சக்கரங்களில் பதித்தாள்.*

*ஆதிசங்கரர் அந்த இரண்டு ஸ்ரீ சக்கரங்களை காதணிகளாக்கி அன்னைக்கு அணிவிக்கவே அன்னையும் சாந்த ரூபினியானாள்.*

*ஆதலால் திருவானைக்கா திருத்தலத்தில் ஆதி சங்கராச்சியார் மடத்துக்கு மற்ற திருக்கோயில்களில் இல்லாத சில சலுகைகள் இந்தக் கோயிலில் உண்டென்பர்.*

***அன்னையே ! ஆதிசக்தியின் திருவுருவே ! வரங்களை வாரி அளிப்பவளே ! ஓம் என்னும் பிரணவ மந்திரத்தால் சிவப் பரம்பொருளை காட்டியவளே! அகிலாண்ட நாயகியே! உம்மை வணங்குகிறோம். தாயே! உந்தன் திருக் கருனையாலும், தவத்திரு ஸ்ரீஜெகநாத சுவாமிகளின் ஆசியாலும் சென்ற 2006- ல் எம்மால் உருவாக்கப்பட்ட இந்த ஸ்ரீசக்கரத்தில் எழுந்தருள் புரிவாயாக !***



# திருவானைக்கா ஆத்மசோதி குறியீடு

*ஈசனது கருவறை விமானத்தில் ஐந்து கலசங்களைக் (ஐந்து கோசங்களைக்) கொண்ட திருவானைக்கா திருத்தலம் ஐந்து திருச்சுற்றுகளைக் கொண்டது. வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய புவியின் திசைகளிலுள்ள திருக்கோபுரங்கள் இத்திருத்தலத்தின் நுழைவாயில்களாக உள்ளன.*

*மேற்கு திசையிலுள்ள திருக்கோபுர வாயில் இரண்டாம் நிலைக்கால் உத்தரத்தின் கீழ்ப்பகுதியில் ஸ்ரீசக்கரத்தின் அழகிய வடிவத்தைக் காணலாம். கிழக்கு திசையில் சுந்தர பாண்டியானால் கட்டப்பட்ட திருக்கோபுரத்தின் இரண்டு நிலைக்கால் படிகளில் 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குறியீடுகள் பொறிக்கப்பட்டிருந்தன.* ***தற்போது அவை மண்மூடி முற்றிலுமாக மறைந்துள்ளன.*** *எனினும் அவற்றின் பிரதிகள் எம்மிடம் பாதுகாப்பாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.*

*அவற்றில் குறிப்பாக முதலாவது நிலைக்கால் படியின் மேல் பகுதியில் வடபுறமாகவும் வடதிசை நோக்கியவாரும் அரிய வகையான திருக்குறியீடு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் அட்டைப்படமாக இடம் பெற்றுள்ள குறியீடும் இஃதே ஆகும்.*



© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

## ஆத்மசோதி குறியீடு

ஐந்து மயக்கோசங்களால் மறைக்கப்பட்டுள்ள மனித உடலானது ஆகாயம், காற்று, நெருப்பு, நீர். நிலம் (பூமி) ஆகிய பஞ்ச பூதங்கள் என்ற ஐந்து அக்கினிகளின் கூட்டுக் கலவையாகும். அப்பஞ்ச பூதங்களுக்கும் ஐந்து ஞான இந்திரியங்களுக்கும் (காது, தோல், கண், நாக்கு, மூக்கு), ஐந்து அறிவுகளுக்கும் தொடர்புண்டு.

ஆத்மசோதி குறியீட்டைப்பற்றியச் செய்தி ஸ்ரீ சக்தி மஹிம்ன ஸ்தோத்திரம் 24வது பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவானது:

**தாயே! அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற ஐந்து கோசங்களால் மறைக்கப்பட்டிருக்கும்; தலை, இரண்டு இறக்கைகள், வால், உடல் என்றப் பிரகடனத்துடன் சீரிய உபநிடத வாக்கியங்களால் பிரசித்தம் செய்யப்பட்ட உம்மையே; பிரகாசமாய் மின்னல் கொடி போல் ஜ்வாலிக்கும் ஆத்மசோதி என்று எவரொருர் அறிகிறானோ, அவனே பரம்மஞானியாவான்.** (பரம்ம ஞானியைப் பற்றி பக்கம் 59-ல் விரிவாகக் காண்க.)

உருக்வேதத்தின் அங்கமான தேவிசுக்தம், தாயாகிய அகிலாண்ட நாயகியை இப்பிரபஞ்சத்தின் மகாராணி எனச் சுட்டிக் காட்டுகிறது.

## பத்து சோதிகள்

ஆத்மசோதி குறியீட்டைச் சுற்றிச் சூழ்ந்துள்ள பத்து சோதியின் வடிவங்கள் அன்னையின் வெளிப்பாடுகளையும் ஆனந்த சோதி வடிவிலான தசமகா வித்யா என்னும் பத்து பெண் தெய்வங்களையும் குறிப்பிடுவதாகும்.




© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அதாவது காளி, தாரா, திரிபுர சுந்தரி, புவனேஸ்வரி, பைரவி, சின்னமஸ்தா, தூமாவதி, பகளாமுகி, மாதாங்கி, கமலாத்மிகா ஆகிய பத்து தேவிமார்களைச் சுட்டிக் காட்டுவதாகும்.

## ஐந்து கோசங்கள்

ஐந்து மயக் கோசங்கள் (பஞ்ச மயக் கோசங்கள்) என்பதற்கு ஐந்து உறைகள் அல்லது கவசங்கள் எனப் பொருளாகும். அவை முறையே அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் எனவும் அவை ஆன்மாவை மூடிக்கொண்டுள்ள ஐவகை உறைகள் எனவும் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.




அவற்றில் அன்னமய கேசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் ஆகிய நான்கு கோசங்கள் வெளிப்புறமாகவும் ஐந்தாவது கோசமான ஆனந்தமய கோசம் நடுவில் மறைந்தும் உள்ளது. அவ்வாறு மறைந்துள்ளது என்பதையே சூட்சுமமாக ஒரு வட்டவடிவப் புள்ளியாகச் சுட்டிக் காட்டப்-பட்டுள்ளது.


### ஈப்புலி என்னும் ஆடுபுலி விளையாட்டுக் குறியீடு

திருவானைக்கா திருக்குறியீட்டின் நடுவில் ஈப்புலி என்னும் ஆடுபுலி விளையாட்டுக்கான வரைப்படத்தில் பத்துக்கோடுகள், ஏழு முனைகள் மற்றும் பதினாறு கட்டங்கள் காணப்படுகின்றன.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022








## பத்துக்கோடுகள்

பத்துக் கோடுகள் பத்துப் பிராணன்களைக் குறிக்கும். இந்த பிராணன்கள் மனித உடலில் பத்து செயல்களை புரிகின்றன என்பர்.

பிராணன் - மேல் நோக்கிய இயக்கம்,

அபாணன் - கீழ் நோக்கிய இயக்கம்,

வியாணன் - அனைத்துப் பக்க இயக்கம்,

உதாணன் - மரண வேளையில் உயிர் வெளியேற உதவுதல்,

சமானன் - உணவை செரித்தல், செரித்த உணவை ரத்தம் போன்றவைகளாக மாற்றுதல்.

நாகன் - வாந்தி, ஏப்பம்.

கூருமன் - கண் இமைகளின் இயக்கம்

க்ருகலன் - பசி.

தேவதத்தன் - கொட்டாவி.

தனஞ்ஜயன் - உடம்பிற்கு ஆரோக்கியம் அளித்தல். எங்கும் நிறைந்து உடலையும் இந்தப் பிரபஞ்சத்தையும் இயக்குகின்றச் சக்தியே இப்பிராணன் என்பர். அந்தச் சக்தியே நம்மில் நமது உடம்பையும், மனத்தையும் செயல்படுத்துவதாக மாண்டூக்கிய உபநிடதம் கூறுகிறது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

மேற்கண்ட பத்து பிராணன்களில், குறிப்பாக ஐந்து செயல்களான ஒரு மேல் நோக்கும் இயக்கம், இரண்டு கீழ் நோக்கும் இயக்கம், இரண்டு எல்லாபக்கம் இயக்கம் (ப.25)என **ஐந்து இயக்கங்கள்** உள்ளடங்கி உள்ளன.

## பதினாறு பகுதிகள்

மகாபுருடருடைய உடலும், மானுடர் உடலும் பதினாறு பாகங்கள் உடையவை எனவும் அவை; பிராணன், புத்தி, ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி, புலன்கள், மனம், உணவு, ஆற்றல், தவம், மந்திரம், கிரியை, உலகம், பெயர் ஆகிய பதினாறே அந்தப் பதினாறு பகுதிகள் என பிரச்ன உபநிடதம் கூறுகிறது.


அதற்குகொருச் சான்றாக திருச்சியில் இருந்து திண்டுக்கல் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மேற்கு திசையில் அமைந்துள்ள வடச்சேரி என்றக் கிராமத்திற்குச் செல்லும் சாலையிலுள்ள **தட்டான் பாறையின்** மேல் பகுதியில் பிரமாண்டமான மனித உருவமும், பதினாறு கட்டங்களுடைய மகாபிதா வரைப்படமும், ஈப்புலி குறியீடும் பொறிக்கப்பட்டுள்ளன. பதினாறு கட்டங்கள் கொண்ட (மகாபிதா வரைப்படம்) சிந்துவெளி முத்திரை எண்: M-496A -ம் மற்றுமொரு சான்றாகும்.



இக்குறியீடு பத்துக்கோடுகளால் உருவான பதினாறு கட்டங்கள் கொண்ட வரைப்படம் தலை, இரண்டு பக்க இறக்கைகள், வால் உடைய ஒரு பறக்கும் பறவை போன்ற ஆடுபுலி விளையாட்டின் குறியீடு மேலே காட்சித்தருவதைக் காணமுடிகிறது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

## சோதிக்குள் சோதி



ஈப்புலி என்னும் ஆடுபுலி விளையாட்டிற்கான குறியீட்டின் மையத்திலுள்ள நான்கு சாய்ந்த கோடுகளையும் அடியிலுள்ள விஞ்ஞானமய கோசத்தின் இரண்டு கோடுகளையும் அதாவது பறவையின் வால்பகுதியையும் இணைத்து பார்க்கும் போது ஒரு சோதிக்குள் மற்றொரு சோதி போன்ற தீபச் சுடர்களின் வடிவங்கள் வெளிப்படுகின்றன. அந்தச் சோதிக்குள் சோதியைப்பற்றி திருமந்திரம் கூறுவதாவது,

சோதித் தனிச்சுடராய் நின்ற தேவனும்

ஆதியும் உள்நின்ற சீவனும் ஆகுமால்

ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்

ஆதி அடிபணிந்து அன்புறுவாரே - திருமந்திரம் **630**

பொருள்: ஒப்பற்ற ஒரு தனிப்பெரும் சோதிச் சுடராக ஒளியாக நின்ற சிவபெருமானும், ஆதியாகிய சக்தியும், ஊனுடல் உள்ளிருக்கிற சீவனும் ஒன்றே ஆகும். படைப்புக்கு முதல்வனான பிரம்மனும், பெரிய கடல் நீரின் நிறம் போன்ற திருமாலும் ஆதியாகிய சிவப் பரம்பொருளின் திருவடிகளைப் பணிந்து அவருக்கு அன்பராய் இருப்பர்.

சீவசோதிக்குள் சோதிச் சுடராக ஒளிர்வது சிவம் என திருமந்திரம் கூறுகிறது. ஆன்மா அடிப்படையில் பரஞ்சோதியும் (பரமாத்மாவும்), ஆத்மசோதியும் **பறவையின் வடிவமே** என திருமந்திரமும், உருக்கு வேதமும், முண்டகஉபநிடதமும், கைவல்லிய நவநீதமும் கூறுகின்றன. அவையாவன,

## பரமாத்மாவும் சீவாத்மாவும் பறவையின் வடிவங்களே

*குறி அறியார்கள் குறி காணமாட்டார்*

*குறி அறியார் கடம் கூடல்பெரிது*

*குறி அறியாவகை கூடுமின் கூடி*

*அறிவறியா இருந்து அன்னமும் ஆமே - திருமந்திரம் 2353*

பொருள்: தம் உடம்பில் குடிகொண்டுள்ள, சீவனை உணர்ந்தறிய இயலாதவர்கள், உயிருக்கு உயிரான சிவன் உருவை உணர்ந்தறியாதவர்கள், உடம்பெடுக்கும் பல பிறவிகளில் கூடி மீண்டும் மீண்டும் பிறப்பார்கள்.

எனவே இறைவன் திருவருளில், தம்மை மறந்து, சீவன் ஆகிய தாம் என்பதும், சிவம் ஆகிய இறைவன் என்பதும் வேறு வேறல்ல, இரண்டும் ஒன்றே என நினைத்து, அவனருளில் பொருந்தி இருங்கள்.

இப்படி இருந்தால், அறிவுவேறொன்றையும் அறியாது. பாலையும் நீரையும் பிரித்தறியும் இயல்புடைய **அன்னப்பறவையை சீவனுடனும் சிவனுடனும்** ஒப்பிடப்படுவதுண்டு.

உருக்குவேத மந்திரம், ஒருமரத்தில் இரண்டு பறவைகள் வாழ்கின்றன. ஒன்று பழம் தின்னும் பறவை, மற்றொன்று பழம் தின்னாத பறவை எனக் குறிப்பிடுகிறது. முண்டகா உபநிடதம் அத்தியாயம் 3:1 நிழலும் நிஜமும் என்றத் தலைப்பின் முதலாம் மந்திரம் கூறுவதாவது,

இணைபிரியாத, ஒரே மாதிரியான இரண்டு பறவைகள் ஒரே மரத்தில் அமர்ந்துள்ளன. அவற்றுள் ஒன்று பழத்தை ருசித்து தின்கிறது. மற்றொன்று பழங்களை தின்னாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி கைவல்லிய நவநீதம், சந்தேகந்தெளிதற் படலம், கவி. 58 கூறுவதாவது,

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*அச்சுவத்த மென்றொரு மரமதி*

*லிரண்டரும் பறவைகள் வாழும்*

*நச்சுமங்கொரு பறவையம் மரக்கனி*

*நன்று நன்றெனத் தின்னும்*

*மெச்சுமங் கொரு பறவைதின்னாதென*

*வியங்கியப் பொருளாக*

*வைச்சு மாமறை சீவனை*

*யீசனை வகுத்தவா றறிவாயே- கவி 58*

*பொருள்: அடுத்த நிமிடத்திற்கு நிலையில்லாத அரசு எனும் மாயா விருட்சத்தில் (மரத்தில்) அருமையான இரண்டு பறவைகள் வாழ்ந்து கொண்டிருக்கும். போகங்களை விரும்புகிற அம்மரத்தில் வசிக்கும் ஒரு பறவை அம்மரத்திலுள்ள பழங்களை நன்றாக இருக்கின்றன, நன்றாக இருக்கின்றன எனத் தின்னும். அதன்கண் துதிக்கப்பெற்ற அம்மரத்திலுள்ள மற்றதொரு பறவை, அம்மரத்திலுள்ள பழங்களை நுகராது. மகத்துவமான அப் பறவையைக் குறிப்புப் பொருளாக வைத்து, பெருமை தங்கிய நூலானது சிவனையும், சீவனையும் பகுத்துக் கூறிய மார்க்கத்தை நீ ஆராய்ந்து அறிந்து கொள்வாய். (அச்சுவத்தம் என்பதற்கு தலைகீழான மாயா விருட்சம் எனப் பொருள் கொள்ளவேண்டும்)*

| | |
|---|---|
| ***மரம்*** | *: பஞ்சபூதங்களின் கூட்டுக்கலவையான உடம்பு, மனம், பிராணன், ஆகியவற்றின் ஒருத் தொகுதி.* |
| ***பழம்*** | *: உலகப்பற்று எனும் புறப்பற்று* |
| ***பழம் தின்னும் பறவை*** | *: மனமும், ஞான இந்திரியங்களுடன் கூடிய சீவாத்மா (நிழல்)* |
| ***பழம் தின்னா பறவை*** | *: ஈசன் - சிவப் பரம்பொருள் (நிஜம்)* |

பொதுவாக நாம், நம்மை சீவனுடன் அதாவது ஐந்து ஞான இந்திரியங்களுடன் கூடிய உடலையும், மனத்தையும் ஒன்றுபடுத்திப் பார்க்கப் பழகியுள்ளோம். அதையே ஆன்மா என்றும் எண்ணுகிறோம்.

உண்மையில் அது நிழல், உண்மையான ஆன்மா அல்ல என்பதை அறியாமல் நாம் இன்பமும், துன்பமும் அனுபவிக்கிறோம். அந்த இரட்டைகளான இன்பத்திலும் துன்பத்திலும் சிக்கிப் பிறவிச் சுழலில் உழல்கிறோம்.

ஆனால் தம்முள் உள்ள உயிராகிய ஆன்மா என்பதே சிவம் அதுவே நிஜம். அது சிவத்திடமிருந்து வெளிப்பட்ட சிறுப்பொறி.

அது இறையம்சம் கொண்டது. உயிராகிய ஆன்மா சிவத்திடம் ஒன்றுபடுத்திக் கொள்ளும்போது நாம் எல்லா கவலைகளிலிருந்து விடுபட்டு ஆனந்தத்தில் திளைக்கிறோம் எனக் குறிப்பிடுகிறார் சுவாமி ஆசுதோஷானந்தர்.

சுவாமி விவேகானந்தர், மேற்கண்ட அனைத்துமே ஒருக் கதையில் உள்ளது என்றும், அதனைப் பழம் தின்னும் பறவை, பழம் தின்னாத பறவை ஆகிய இரண்டு பறவைகள் நிஜமும் நிழலும் என ஒப்பிட்டுக் காட்டி நம்மை பக்தி பரவசத்தின் எல்லைக்கே அழைத்துச் செல்கிறார். அக்கதையையும் அதன் முழு விளக்கத்தையும் காண்போமாக.

**பழம் தின்னும் பறவையும் பழம் தின்னா பறவையும்**

ஒரே மரத்தில் இரண்டு பறவைகள் வாழ்கின்றன. ஒன்று மேலாகவும் மற்றொன்று கீழாகவும் இருக்கின்றன. மேலே உள்ள பறவை பேசாமல், அமைதியாக, அதிக பெருந்தன்மையுடன், அதனைச் சுற்றி தெய்வீக ஒளிவட்டத்துடன் அமர்ந்திருக்கிறது.

கீழே உள்ள மரக் கிளையில் அமர்ந்துள்ள பறவை ஒரு மரக்கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவித் தாவி இனிப்பும், கசப்பும் கொண்ட பழங்களை மாறி மாறித் தின்றுகொண்டு மனமகிழ்ச்சியையும், மனவருத்தத்தையும் மாறி மாறி அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*சற்று நேரத்தில் கீழே இருந்த பறவை ஒரு அதிகக் கசப்பான பழத்தைத் தின்று அதிக வெறுப்பும் மனவேதனையும் அடைந்து மேலே உள்ள பறவையை நோக்கியது.*



*அதிசயமாகவும், தங்கத்தில் கரைத்து எடுத்தது போன்றும் காணப்படுவதோடு மட்டுமில்லாமல் இனிப்பும், கசப்பும் கொண்ட எந்தவொரு பழங்களையும் தின்னாமலும் மனமகிழ்ச்சியும், மனவருத்தமும் அடையாலும், எப்போதும் அமைதியாகத் தன்னைத் தவிர வேறு எதையுமே பார்க்காமல் இருப்பதைக் காண்கிறது.*

*நாமும் அந்தப் பறவை போலிருக்க வேண்டுமென்ற ஆவலுடன் அதனை நோக்கி தாவி அருகில் சென்றது. விரைவிலேயே மேலே உள்ள பறவை போல இருக்கவேண்டும் என்றத் தன் விருப்பத்தை மறந்து விட்டு முன்பு போலவே பழங்களைத் தின்னத் துவங்கியது.*

*சிறிது நேரத்தில் மிகவும் கசப்பான பழத்தை தின்றது. அதனால் தன்னைத்தானே மிகுந்த மனவருத்தத்திற்கு ஆட்படுத்திக் கொண்டது. மீண்டும் மேலே பார்த்து அந்தப் பறவையின் அருகில் நெருங்க முயற்சி செய்தது. இந்தத் தடவையும் மறந்தது. மீண்டும் பழங்களை தின்று வருத்தமடைந்து, மேலே உள்ள பறவையை நோக்கி தாவித் தாவி அதன் மிக அருகில் வந்தது.*

*மிக அருகில் வந்ததுமே மேலே உள்ள பறவையைச் சுற்றியுள்ள தெய்வீக ஒளிவட்டத்தின் பிரகாசமான வெளிச்சத்தில் தன்னுடல் முழுவதும் கரைந்து விடுவது போன்ற புதியதொரு மாற்றத்தை உணர்ந்தது.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

மேலும் மிகவும் அருகாமையில் வந்தவுடன் தன்னிடம் இருந்தது எல்லாம் கரைந்து சென்றது போன்ற அற்புதமானதொரு மாற்றத்தை உணர்ந்தது.

கீழே இருந்த பறவை; தான் கீழேயே இருந்ததையும், அது மேலே உள்ள பறவையின் வெளிச்சத்தின் நிழல் என்பதையும், அது எல்லா நேரங்களிலும் மேலே உள்ள பறவையின் சாயலே (நிழலே) என்ற உண்மையையும் உணர்ந்தது.

சிறுபறவையாகவும், கீழே இருப்பது போன்றும், இனிப்பும் கசப்பும் கொண்ட பழங்களைத் தின்று மனமகிழ்ச்சியும் மனவருத்தமும் மாறி மாறி அனுபவித்தது எல்லாம் இருட்டில் கண்ட வெறும் கனவு என்பதையும் உணர்ந்தது.


எப்போதும் அமைதியாகவும், பேசாமலும், பெருந்தன்மையுடனும், அதிக ஒளிவட்டத்துடன், விருப்பும் வெறுப்பும் இன்றி, மனமகிழ்ச்சிக்கும் மனவருத்தத்திற்கும் அப்பாற்பட்டு நிஜமான பறவை மேலேயே அப்படியே தான் இருக்கிறது என்பதை உணர்ந்தது.

மேலே உள்ள பறவை சிவம், கீழே உள்ள பறவை சீவன். புற உலகப்பற்றால் பலச் செயல்களை செய்ததால் (இனிப்பும் கசப்பும் கொண்ட பழங்களைத் தின்றதால்) மனமகிழ்ச்சியும் மனவருத்தமும் மாறி மாறி அடைந்ததை எண்ணி வருந்தியது.

அவ்வாறு அது **மன வருத்தமடைந்த போது மட்டும் இறைவனை நோக்கி தாவித்தாவி சென்றதை எண்ணி மனம் வருந்தியது.**

மனதின் புறப்பற்றால் விளைந்த கீழ்த்தரமானதும், மிகவும் வெறுக்கத்தக்கதுமான சுயநலம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் கரைந்து மறைந்தன. தன்னிடமுள்ள பிரகாசமான ஒளியே சிவம் என்ற உண்மையை உணர்ந்து பேரானந்த பரவச நிலையை அடைந்தது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022





*குறிப்பு: பழம் தின்னும் பறவையின் குறீடுகளை பெரும்பாலும் திருக்கோயில்களை நோக்கியபடியும், திருக்கோபுரங்களின் நிலைக்கால் படிகளிலும், கருவறையின் முன்புறத்திலும் அதிக அளவில் காணலாம்.*

## சுவாமி விவேகானந்தரின் கதை உணர்த்தும் உண்மைகள்

*நான் சிறியன், சக்தியற்றவன் எனப் பல வகையான பொய்களை உண்மை என்று நம்புவது தவறு. இது ஆண் என்றும், இது பெண் என்றும் கருதுவது தவறு. இது நல்லது செய்யும் என்றும் இது கெட்டது செய்யும் என்றும் மனதின் பொய்யுரைகளை நம்புவதும் தவறு.*

*இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து சீவராசிகளும் அடிமை என்றும், அவை தேவாதி தேவர்களால் ஆட்சி செய்யப்- படுவதாக மனம் சொல்வதை நம்புவதும் தவறு.*

*தேவர்களின் உதவிகள் கோரி யாகங்கள் செய்வதும், பூசைகள் செய்வதும், மந்திரங்களை ஓதுவதும் தவறு. எல்லாத் தவறுகளுக்கும் நம் மனமும் எண்ணமுமே காரணம். இன்பமும், துன்பமும் பிறரது செயல்களால் வருவதில்லை. அவை ஒவ்வொருவர் மனதால் விளைவது.*

*நம்முடைய தேவைகளுக்கு ஓர் எல்லையே இல்லை, அது பிரபஞ்சம் எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியது.*

*ஆகவேதான் கஞ்சன் பொருள் மீது நாட்டம் கொண்டு பிறருக்கு உதவாமல் தனக்கென பொருள் சேர்க்கிறான்.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

திருடன் திருடுகிறான், கொலைகாரன் கொலை செய்கிறான், ஏமாற்றுபவன் ஏமாற்றியே பிழைக்கிறான், பாவி மேலும் மேலும் பாவங்களைச் செய்கிறான்.

எவ்வாறு சூரியனின் வெளிச்சம் தண்ணீர் துளிகளில் பிரதிபளித்து சிறிய சூரியன் போல் தெரிகிறதோ அவ்வாறே நம்முள் உள்ள சீவன் (உயிர்) சிவப் பரம்பொருளின் பிரதிபளிப்பேயாகும்.

இந்த உண்மையை இயற்கையாகவே நம்மிடம் உள்ள புனிதமான புத்தியின் உதவியுடன் மனதால் மட்டுமே நாம் அறிந்து உண்மையை உணரமுடியும்.

## ஜீவராசிகளின் குறிக்கோள்

இவ்வுலகில் வாழும் எல்லா ஜீவராசிகளுக்கும் ஒரு பொதுவான குறிக்கோளுண்டு. எல்லா ஜீவராசிகளின் வாழ்க்கையில் ஒரு பாதுகாப்பான சுதந்திரத்தை அடையவேண்டும் என்பதே அக்குறிக்கோள். அந்தக் குறிக்கோளைத் தவிர வேறு எந்தவிதமான குறிக்கோளும் இல்லை.

சுயநினைவுடனோ அல்லது சுயநினைவு இல்லாமலோ அனைத்து சீவராசிகளும் அந்தப் பரிபூர்ணமான பாதுகாப்பான சுதந்திரத்தையே அடைய விரும்புகின்றன.

அத்தகைய பாதுகாப்பான சுதந்திரம் எல்லா இடங்களிலும் நிறைந்து இருக்கின்ற ஒவ்வொரு அணுவிலும் உள்ளது. அவ்வாறு ஒவ்வொரு அணுவிலும் உள்ளதே பரம்பொருளான சிவம்.

சிவப் பரம்பொருள் மட்டுமே அந்தப் பூர்ண சுதந்திரத்தையும், அதனை அடையும் அனைத்துக் கலைகளையும் அறிந்தவர்.

அவ்வாறே நம் உடம்பிலுள்ள சிவப் பரம்பொருளின் அங்கமான உயிராகிய சீவனும், பூர்ண சுதந்திரத்தை அடையும் அனைத்துக் கலைகளையும் புத்தியின் வாயிலாக உணர்த்துகிறது என்பதை தன்னுணர்வதே ஆறு அறிவு கொண்ட மனித குலத்தின் குறிக்கோள். இதைத் தவிர வேறு எந்த ஒருக் குறிக்கோளும் இல்லை.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

## *அனைத்து சீவராசிகளின் வாழ்க்கையின் இரகசியம்*

*பரமாத்மாவின் (சிவத்தின்) அங்கமான உயிராகிய சீவன் என்ற ஒன்றே உண்மை, சிவமும், சீவனும் ஒன்றே ! அந்த ஒன்றைத் தவிர மற்றொன்று எதுவுமே இல்லை.*

***நானே சிவம்! நானே இறைவன்!*** *என்பதை என்றும் எப்போதும் மனதில் திடமாகவும், பூர்ண நம்பிக்கையுடனும் வாழவேண்டும் என்பதே அனைத்து ஜீவராசிகளின் வாழ்க்கையின் இரகசியம். இந்த ரகசியத்தைப் பற்றி திருமந்திரம் கூறுவதாவது,*

*சீவன் எனச்சிவன் என்ன வேறில்லை*

*சீவனார் சிவனாரை அறி கிலர்*

*சீவனார் சிவனாரை அறிந்த பின்*

*சீவனார் சிவன் ஆயிட்டு இருப்பாரே - திருமந்திரம் 2017*

*பொருள்: சீவன் என்றும் சிவன் என்றும் இரண்டில்லை. இரண்டும் வேறல்ல என்றாலும், சீவன் தன்னுள் இருக்கும் சிவத்தை அறிந்துணராது இருக்கிறது.*

*சீவன் சிவத்தை அறியும் ஞானம் பெற்று விட்டால் சீவன், சிவமயமாகி இருக்கும். அவ்வாறு சீவன் சிவனை அறிவதால், சீவன் தன் சீவத்தன்மை நீங்கிப் பரஞான உணர்வு பெறுவதாகும்.*

*ஒன்றுஇரண்டு ஆகிநின்று ஒன்றி ஒன்றாயினோர்க்கு*

*ஒன்றும் இரண்டும் ஒருகாலும் கூடிடா*

*ஒன்றுஇரண்டு என்றே உரை தருவோர்க்கெல்லாம்*

*ஒன்றுஇரண்டாய் நிற்கும் ஒன்றோடு ஒன்றானதே - திருமந்திரம் 2077*

*பொருள்: பரம்பொருள் ஒன்றே என்றாலும் அப்பரம்பொருளாகிய சிவன், சீவனுடன் சேர்ந்து இரண்டாக இருந்தாலும், இரண்டும் ஒன்றே என்று எண்ணும் சிவப்பேறு*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

பெற்றவர்களுக்கு, இரண்டும் வேறு வேறு என்று எண்ணத்தோன்றாது. இப்படிக்கில்லாமல், ஒன்றும், இரண்டும் என்று தனித்தனியே பிரித்துப் பார்க்கின்றவர்களுக்கு, இரண்டும் ஒருபோதும் ஒன்று சேரா.

ஒன்று இரண்டு என்று பகுத்துப் பார்ப்பவர்களுக்கு சிவனும் சீவனும் ஒன்று சேராது. எப்போதும் இரண்டாகப் பிரிந்து தனியாகவே இருக்கும்.

மேற்கண்ட பழம் தின்னும் பறவையும், பழம் தின்னா பறவையும் என்ற சுவாமி விவேகானந்தர் கூறிய கதை, கதையுணர்த்தும் உண்மைகள், ஜீவராசிகளின் குறிக்கோள், அனைத்து ஜீவராசிகளின் வாழ்க்கையின் இரகசியம், திருமந்திரம் பாடல்கள் ஆகியவை அனைத்தும் பழந்தமிழர்களின் வாழ்வியல் போதனைகளே.

அவை எவ்வாறு அனுபவரீதியில் உணர்த்தப்பட்டிருக்கக் கூடும் என்பதை ஒரு கற்பனைக் கதையின் வாயிலாகவும் காண்போமாக.

## ஒரு கற்பனை கலந்தக் கதை

முன்னொரு காலத்தில் தமிழகத்திலுள்ள ஓர் ஊரில் மகான் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

அவர் ஓர் அரச மரத்தடியில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டு மனதை ஒருநிலைப்படுத்தி ஆழ்ந்த தியாணத்தில் அமர்ந்திருந்தார்.

அவர் அவ்வாறு தியாணத்தில் இருப்பதை ஒரு நபர் பலநாட்கள் பார்த்துக் கொண்டே இருந்தார்.

ஒரு நாள் தியானத்தை முடித்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருப்பதைக் கண்ட அந்நபர், அவர் அருகில் சென்று வணங்கி, **சுவாமி! தாங்கள் கண்களை மூடிக்கொண்டு இருப்பதை நான் பல நாட்கள் பார்த்துக் கொண்டிருந்தேன்.**

**கண்களை மூடிக்கொண்டு என்ன செய்து கொண்டிருந்தீர்கள்** எனக் கேட்டார். அதற்கு அவர் **நான் தியானம் செய்து சொண்டிருந்தேன்** என்றார்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அதற்கு அந்நபர், **தியானம் என்றால் என்ன சுவாமி?** என்றுக் கேட்டார். **தியானம் என்றால் மனதை ஒருநிலைப்படுத்தி ஆன்மாவை பற்றி இடைவிடாது சிந்தித்தல்** என்றார் அவர். ஆனாலும் அந் நபர், **சுவாமி எனக்கு புரியவில்லை தயவுசெய்து சற்று விளக்கமாக கூறுங்கள்** என்றார்.

**நான் கண்களை மூடிக்கொண்டு தியாணத்தில் சீவன் என்னும் ஆத்மாவை சிவன் என்னும் பரமாத்வோடு ஒன்றாக இணைக்கும் மார்க்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தேன்** என்றார்.

**அப்படியா சுவாமி? தனக்கும் அந்த மார்க்கத்தைக் காட்ட வேண்டும்** என அந்நபர் மிகவும் ஆர்வத்துடன் கேட்டார். அந்நபரின் ஆர்வத்தைப் புரிந்து கொண்ட அம்மகான் முண்டக உபநிடதத்தின் **நிஜமும் நிழலும்** பற்றியும் திருமந்திரம் பாடல்களின் விளக்கங்களையும் உபதேசித்தார்.

மறுநாள் அந்நபர் அம்மகானிடம் வந்து சுவாமி ! நேற்று தாங்கள் உபதேசித்ததை பலமுறை சிந்தித்து பார்த்தேன் எனக்கு ஒன்றும் புரியவில்லை, மீண்டும் உபதேசம் செய்யுங்கள் என்று கேட்டார். மகானும் சற்று விளக்கமாக உதாரணங்களுடன் விளக்கமாகக் கூறினார்.

அந்நபர் பலமுறை சிந்தித்து பார்த்தபோதும் அவருக்கு புரியவில்லை எனவே மறுநாளும் அந்நபர் மகானிடம் வந்து சுவாமி மன்னிக்கவேண்டும் எனக்கு புரியும்படி சொல்லுங்கள் என்றார்.

இந்த நபருக்கு **ஆன்மிகத் தேடல் உணர்வு** வந்துவிட்டது என்பதை அறிந்துகொண்ட அந்த மகான், அனுபவரீதியில் எளிதாகவும் புரிந்து கொள்ளும்படியாகப் பத்துக்கோடுகள், பதினாறு கட்டங்கள் கொண்ட ஈப்புலி வரைப்படத்தை வரைந்து மூன்று காய்களை புலிகளாகவும், பதினைந்து காய்களை ஆடுகளாகவும் வைத்து, காய்களை நகர்த்தி விளையாடி மூன்று புலிகளை அடக்கிக் காட்டினார்.

இந்த விளையாட்டை நீங்களும் உங்களது நண்பர்கள், உற்றார் உறவினருடன் விளையாடி மூன்று புலிகளை அடக்க மனப்பயிற்சி செய்யுங்கள் என்றார்.

அவ்வாறு மனப்பயிற்சி செய்து வந்தால் விரைவில் நான் உபதேசம் செய்தவற்றின் பொருள் புரியும் என்றும் கூறினார்.

அந்த நபரோடு மற்றொருவர் என அன்று மனப்பயிற்சிக்காக விளையாடத் துவங்கிய **ஈப்புலி என்ற ஆடுபுலி விளையாட்டே** இன்று தென்னகத்தின் அங்கமான கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு என்ற நான்கு மாநிலங்களில் நாயும் புலியும்; புலி பேக்கா; சிங்கமும் புலியும்; ஆடுபுலி விளையாட்டு போன்றப் பல்வேறு பெயர்களில் விளையாடப்பட்டு வருகின்றன.

7500 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகம் எனக்கருதப்படும் சிந்து சமவெளி நாகரிகத்தின் எச்சங்களான (M-18A) மோ-18எ என்ற அடையாள எண்ணுடைய சதுர வடிவிலான முத்திரையில் ஆடுபுலி விளையாட்டின் குறியீடு **அருள்மிகு / திரு** என்பதைக் குறிக்கும் ***சீ*** என்ற ஒரெழுத்துச் சொல்லாக, வலமிருந்து இடமாக ***சீ பண்ணண்*** எனப் படித்தறியும்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.



எனவே ஆடுபுலி விளையாட்டின் காலம் 7500 ஆண்டுகளுக்கும் முற்பட்டதாகும். இந்த ஆடுபுலி விளையாட்டின் குறியீட்டை வடநாட்டு ஆய்வாளர்கள் குதிரையின் வடிவம் எனத் தவறாகக் கருதுவது மிகவும் வருந்தத் தக்கதொரு செய்தியாகும்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# ஆடுபுலி விளையாட்டும் ஆய்வும்

உருக்குவேதம், முண்டக உபநிடதம், கைவல்லிய நவநீதம், திருமந்திரம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் ஆடு புலி விளையாட்டிலும் அதற்கான வரைபடத்திலும், மன்னிக்கவும் குறியீட்டிலும் எவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்போமாக.

ஆடுபுலி விளையாட்டிற்கான குறியீடானது இரண்டு செங்குத்துக் கோடுகள், நான்கு படுக்கைக் கோடுகள், நான்கு சாய்வுக் கோடுகள் என மொத்தம் பத்துக்கோடுகளைக் கொண்டது. அந்தப் பத்துக்கோடுகளே பதினாறு பகுதிகளாகவும் (கட்டங்களாகவும்), ஏழு முனைகள் கொண்ட ஒரு பறக்கும் பறவையின் நிழலின் வடிவமாக உள்ளது. பத்துக் கோடுகள் பற்றியும், பதினாறு பகுதிகள் பற்றியும் முற்பகுதியில் (ப.25-26) அறிந்தோம்.

## ஏழு முனைகள் கொண்ட ஒரு பறவையின் வடிவம்



ஆன்மாவின் முதல் பரிமாணமாகிய வைசுவானரனுக்கு சில அடையாளங்கள் உண்டு. அவனுக்கு அங்கங்கள் ஏழு. சொர்க்கம் (தலை), சூரியன் (கண்கள்), காற்று (பிராணன்), வெளி ( நடுப்பகுதி) , தண்ணீர் (சிறுநீரகம்) மற்றும் பூமி (கால்கள்) ஆகியவை அந்த ஏழு முனைகளாகும் (ப.25).

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

பத்துக்கோடுகளும், பதினாறு பகுதிகளும் ஏழு முனைகளும் கொண்டதொரு பறவையாகும். (படம்: திருச்சி, இலால்குடி சிவன் கோயில் குறியீடு.)

திருவானைக்கா திருக்குறியீட்டின், வெளிச்சுற்றில் பத்து சோதிகளும், நான்கு கோசங்களும், நடுவில் பத்துக் கோடுகளும், பதினாறு கட்டங்களும் கொண்டதொரு ஈப்புலி என்னும் ஆடுபுலி விளையாட்டுக் குறியீடு (ப.22) காட்சித் தருவது நினைவு கூறத்தக்கது.

ஆடுபுலி விளையாட்டிற்கான குறியீட்டில் மறைந்துள்ள தத்துவங்களைச் சற்று விரிவாகக் காண்போமாக. முதலில் மூன்று புலிகளைப் பற்றியும், அடுத்தப்படியாகப் பதினைந்து ஆடுகளைப் பற்றியும் காண்போம்.

## மூன்று புலிகள்

ஆரம்பத்தில் பிரம்ம பிரளயத்தின்போது பரம்பொருள் என்ற ஒன்றைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

பின்னர் நேரமும், கர்மாவும், எண்ணங்களாலும் காரணகாரியமாக **புருடன்** என்னும் மகாபிதா, **பிரக்கிருதி** என்னும் மூலப் பகுதி என இரண்டாக வெளிப்பட்டன.

அவற்றில் பிரக்குருதி என்பது சத்வ (சாத்துவிகம்), இரசோ (இராசதம்), தமோ (தாமசம்) ஆகிய மூல முக்குணங்களின் தொகுப்பும், மனிதனின் மூன்று குணங்களும் ஆகும்.

சத்துவ குணம் என்பது நற்செயல்களில் மனதை செலுத்தும் குணம். எனினும் அது நெறிமுறைபடுத்துவதற்கு உட்பட்டது. இரசோகுணம் என்பது மத்தியமான அறிவு, தமோகுணம் என்பது காமவெகுளி மயக்கங்களுக்கு காரணமான குணம்.

மனிதர்களின் மனத்தடுமாற்றத்திற்குக் காரணம் இம்மூன்று குணங்களே ஆகும். இம்மூன்று குணங்களைப் பற்றித் திருமந்திரம் கூறுவதாவது,

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

முக்குணம் மூடற வாயுவை மூலத்தே

சிக்கென மூடித் திரித்து பிடித்திட்டுத்

தக்க வலம்இடம் நாழிகை சாதிக்க

வைக்கும் உயர்நிலை வானவர் கோனே - திருமந்திரம் **615**

பொருள்: தாமசம், இராசதம், சாத்துவிகம் ஆகியவை மூன்று குணங்கள். இந்த முக்குணங்கள் மனித மனங்களைப் பற்றிக்கொண்டு அவற்றை ஆட்டுவிக்கின்ற இயல்புகள் உடையவை.

இம்மூன்று குணங்களில் இயல்பு கெடப் பிராணனை, மூலாதாரத்தில் மேலெழும்படி இயக்கி, சூரியக் கலையில் வலப்பக்கமாகவும், சந்திரக் கலையில் இடப் பக்கமாகவும் ஒரு நாழிகைப் பொழுது பயிற்சி செய்பவருக்கு தலைவனான (கோன்) சிவப் பரம்பொருள் உயர்நிலை அடைய அருள் செய்யும்.

மேற்கண்ட மனித மனங்களை ஆட்டுவிக்கின்ற இயல்புகள் உடைய சத்வ ( சாத்துவிகம் ), இரசோ ( இராசதம்), தமோ ( தாமசம் ) ஆகிய மூன்று குணங்களே **மூன்று புலிகளாகும்.** ஆடுபுலி விளையாட்டில் அம்மூன்று புலிகளும் மூன்று பெரிய காய்கள் அல்லது கற்கள் எனக் கருதப்படுவதாகும்.

## பதினைந்து ஆடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| நிலம் | : | மூக்கு | வாசனை | முதலாம் அறிவு |
| நீர் | : | நாக்கு | சுவை | இரண்டாம் அறிவு |
| நெருப்பு | : | கண் | பார்வை | நான்காம் அறிவு |
| காற்று | : | தோல் | ஸ்பரிசம் | மூன்றாம் அறிவு |
| ஆகாயம் | : | காது | கேட்டல் | ஐந்தாம் அறிவு |

| | |
|---|---|
| மனம் (விருப்பம்) | ஆறாம் அறிவு |
| புத்தி (போதனை) | ஏழாம் அறிவு |
| சத்து (உண்மை) | எட்டாம் அறிவு |
| சித்தம் (தெளிவு) | ஒன்பதாம் அறிவு |
| ஆனந்தம் (பேரின்பம்) | பத்தாம் அறிவு |

ஐம்பூதங்களுடன் தொடர்புடைய ஞான இந்திரியங்களால் பெறும் ஐந்து அறிவுகளால் ஈர்க்கப்பட்ட ஆறாம் அறிவான மனம் கட்டளையிட கர்ம இந்திரியங்களான **வாய்** பேசுகிறது, **கைகள்** செயலாற்றுகின்றன,

**கால்கள்** நடக்கின்றன, **குதம்** கழிவுகளை வெளியேற்றுகிறது. **குறி** சிறுநீர் கழித்தும் இனவிருத்தியும் செய்கிறது.

ஐம்பூதங்களுடன் தொடர்புடைய ஞான இந்திரியங்கள் **ஐந்து**, அறிவுகள் **ஐந்து,** கர்ம இந்திரியங்கள் **ஐந்து** என பதினைந்துமே **பதினைந்து ஆடுகளாகும்.**

அதாவது பதினைந்து சிறிய காய்கள் அல்லது கற்கள் என்பர்.

## ஆடுபுலி விளையாட்டு

ஆடுபுலி விளையாட்டிற்கு **ஈப்புலி** என்றப் பெயருண்டு. **ஈ** என்பதற்கு பறவை, அன்னை பார்வதிதேவி எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

**புலி** என்பது ஒரு மிருகம். அம்மிருகம் அன்னை பார்வதி தேவியின் வாகனம்.

எனவே 23 வெட்டுப் புள்ளிகள் கொண்ட பறவை போன்ற ஆடுபுலி விளையாட்டின் வடிவத்திற்கும் அன்னை பார்வதிதேவிக்கும் தொடர்புண்டு என்பதை சக்தி மஹிம்ன தோத்திரம் வாயிலாக முற்பகுதியில் (பக்கம் 23-ல்) அறிந்தோம்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

## விளையாட்டின் விதிமுறை

ஆடுபுலி விளையாட்டில் புலியாக ஒருவரும், ஆடாக ஒருவரும் என இருவர் இடம் பெறுவர்.

புலியாக விளையாடுபவர் தனது மூன்று புலிகளை (காய்களை) உச்சியிலும் அதன் கீழும் வைத்து ஆட்டத்தை துவங்குவார்.

ஆடாக விளையாடுபவர் தனது முதல் ஆட்டை (காயை) புலி தாண்டி வெட்டி விடாமல் பாதுகாப்பாகவும் ஒவ்வொன்றாகவும் தன் ஆடுகளை (காய்களை) வைப்பார்.



புலியானவர் தனது காயை கீழாகவோ, மேலாகவோ பக்கவசமாகவோ நகர்த்தி ஆட்டை வெட்ட முயற்சிப்பார், ஆடானவர் தனது அனைத்து காய்களை ஒவ்வொன்றாக வைத்தும், நகர்த்தியும் புலியால் வெட்டப்படாமலும், புலியை நகர்த்த விடாமலும் அடைக்க முயற்சிப்பார். இதுவே விளையாட்டின் விதிமுறை.

## விளையாட்டின் உட்பொருள்

ஆடுபுலி விளையாட்டின் மூலமாக திகழ்வது ஆறாவது அறிவான மனக்கட்டுப்பாடு. அதற்கு மனம் ஏழாவது அறிவான புத்தியின் உதவியை நாடவேண்டும். புத்தியின் உதவியால் மனம் ஒருநிலைப்படுத்தப்பட்டு அதாவது கட்டுப்படுத்தப்பட்டு உண்மையை உணர்ந்து சிந்தித்து மனத் தெளிவுடன் செயல்படும்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*அதாவது ஆடாக விளையாடுபவர் தனது மனதை ஒருநிலைப்படுத்தி அதனை புத்தியோடு இணைத்து, நன்றாக சிந்தித்து மனத் தெளிவுடன் ஆடுகளை (காய்களை) வெட்டுக் கொடுக்காமல் நகர்த்தி புலிகளை அங்கும், இங்கும் நகர முடியாமல் அடக்கி (அடைத்து) வெற்றி பெற்று மனமகிழ்ச்சி அடைவார்.*

*புத்தியின் உதவியை நாடாத புலியாக விளையாடியவர் மூன்று புலிகள் நகர்த்த இடமின்றி அடைக்கப்பட்டு விடுவதால் தோல்வி அடைந்து மனம் வருந்துவார்.*

*ஆடாக விளையாடுபவரும் புலியாக விளையாடியவரும் மனதை ஒருநிலைப் படுத்தி புத்தியோடு இணைத்து, நன்றாக சிந்தித்து காய்களை நகர்த்தி விளையாடினால் ஆட்டம் எளிதில் முடிவடையாது. அது பார்வையாளர்களுக்கு ஒரு நல்ல அனுபவமாகவும் அமையும்.*

*எனவே, ஆடுபுலி விளையாட்டை வெறும் பொழுது போக்குவதற்கான விளையாட்டு எனக் கருதுவது தவறு.*

*நாம் ஒவ்வொருவரும் புறப்பற்று இல்லாமல் மனதை ஒருநிலைப்படுத்தி புத்தியோடு இணைத்து, நன்றாக சிந்தித்து, செயல்பட்டால் வாழ்க்கையில் பல வெற்றிகள் பெற்று மனமகிழ்ச்சியுடன் வாழலாம் என்ற உண்மையை உணர்த்துவதே ஆடுபுலி விளையாட்டின் மிக உயர்ந்த குறிக்கோளாகும்.*

*ஆடுபுலி விளையாட்டில் வெற்றி பெற்று மகிழ்ச்சி அடைவது போல நாமும் நம் வாழ்நாட்களில் மனவருத்தம் அடையாமல் மனமகிழ்ச்சியுடன் வாழ, மனத்தையும், புத்தியையும் ஒருங்கிணைத்து வாழ வேண்டும் என்பது தெளிவாகிறது.*

*மேலும் மனதைப்பற்றியும், புத்தியைப்பற்றியும் அவை எங்கே இருக்கின்றன என்பதைப்பற்றியும் சற்று விரிவாகக் காண்போமாக.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# மனமும் புத்தியும்

ஐம்பூதங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர். பூமி ஆகியவற்றின் கூட்டுக்கலவையே மனித உடல் என்பதையும் அவை ஐந்து அறிவுகளுக்கும், ஐந்து ஞான இந்திரியங்கங்களுக்கும், ஐந்து கர்ம இந்திரியங்களுக்கும், மனமாகிய ஆறாவது அறிவுக்கும் உள்ள தொடர்பை முற்பகுதியில் கண்டோம்.

மனித உடல் பத்து பிராணசக்திகளால் இயக்கப்படுகிறது என்பதையும் கண்டோம். ஏழாவது அறிவான புத்தியின் உதவியால் ஆறாவது அறிவான மனம் ஒருநிலைப்படுத்தப்பட்டு ஆடுபுலி விளையாட்டில் வெற்றிப் பெறமுடியும் என்பதையும் அறிந்தோம்.

மேற்கண்டவற்றின் தொடர்ச்சியாக மனம், புத்தி ஆகிய இரண்டைப்பற்றி சற்று விரிவாகக் காண்போமாக.

## மனம்

**மனம்** என்பதற்கு நெஞ்சம், எண்ணம், விருப்பம் எனவும், புத்தி என்பதற்கு அறிவு, இயற்கையுணர்வு, ஆராய்ந்து செய்யும் கரணம், போதனை, வழிவகை எனவும் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

**மனித உடலில் மனம் எங்கே இருக்கிறது?** என்பதற்கு மனம் இடதுபுற மார்புகாம்புக்கு மேல் முக்கோண வடிவத்தில் இருப்பதாக யோக சாத்திர நூல்கள் கூறுகின்றன.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022



மகாவிட்டுணு, அன்னை இலக்குமியை மனதில் வைத்து கொண்டுள்ளதாக விட்டுணு புராணம் கூறுகிறது. அதற்குச் சான்றாக ஓராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மகாவிட்டுணுவின் திருவுருவச் சிற்பங்களில் அவரது இடதுபுற மார்பின் காம்புக்கு (ஸ்தன வட்டத்திற்கு) மேலாகவும் பிரிக்க முடியாதவளாகவும் ஒரு முக்கோண வடிவத்தை காணலாம். மேலும் மனத்தைப் பற்றி திருமந்திரம் கூறுவதாவது,

*மனத்தில் எழுந்தோர் மாயக் கண்ணாடி*

*நினைப்பின் அதனின் நிழலையும் காணார்*

*வினைப்பயன் போக விளங்கியும் கொள்ளார்*

*புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே - திருமந்திரம் **1681***

பொருள்: மனிதர்களின் மனம் இருக்கிறதே, அது ஒரு மாயக் கண்ணாடி போன்றது. பலவாறான எண்ணங்கள் தோன்றி எழும் அந்த மனத்தின் நிழலைக் கூட காண மாட்டார்கள். பிறவித் துயரை எவ்வளவுதான் விளக்கிச் சொன்னாலும் புரிந்து கொள்ள மாட்டார்கள். வெளி உலக இன்பங்களுக்கு ஆசைப்பட்டுப் பாவத்தை மேலும் மேலும் பெருக்கி கொண்டிருக்கிறார்களே. **என்னே அறியாமை!** என்றபடி.

## புத்தி

**மனித உடலில் புத்தி எங்கே இருக்கிறது?** என்பதற்கு புத்தி என்ற ஏழாம் அறிவு, உயிராகிய ஆன்மாவோடு உடன் பிறந்தது. அது ஒரு சின்னஞ்சிறிய வட்டவடிவ புள்ளியாக ஆன்மாவோடு இணைந்து உள்ளதாக யோக சாத்திரம் கூறுகிறது. அந்த சின்னஞ்சிறிய வட்டவடிவமான புத்தியை விரிவடையச் செய்வதே கல்வி.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

உலகியல் கல்விக்கூடங்களில் **ஆசிரியர் பெருமக்கள்** தங்களது வாழ்க்கை அனுவப அறிவின் வாயிலாக மாணவர்களின் புத்தியை விரிவடையச் செய்கின்றனர்.

அவ்வாறு விரிவடையும் அறிவு உலகியலைச் சார்ந்தது. அந்த அறிவால் புறஉலகை புரிந்து கொண்டு இன்பம் - துன்பம் ஆகிய இரட்டைகளை அனுபவித்து வாழ்ந்து பெரும் பதவியையும், பெரும் புகழையும், பெரும் பொருட் செல்வங்களையும் அடையலாம்.

அகக்கல்விக்கூடங்களில் **முனிவர்களாகிய ஞானிகள்** தனது வாழ்க்கை அனுபவ அறிவின் வாயிலாக அதனால் மனத்தெளிவு (ஞானம்) பெறுகிறோம்.

அவ்வாறு மனத்தெளிவடைவது ஆன்மிக இயலைச் சார்ந்தது. அகக்கல்வியால் அகஉலகை புரிந்துக் கொண்டு ஆனந்தமாக வாழலாம்.

அவ்வாறு வாழ்வதால் உலகில் பெரும் பதவியையோ, பெரும் புகழையோ, பெரும் பொருட் செல்வங்களையோ அடைய முடியாது.

அதற்கு மாறாக உலகியலைச் சார்ந்த அறிவால் பெறமுடியாத தன்னுணர்வு என்னும் தன்னறிவும், தன்னுண்மை என்னும் சிவப் பரம்பொருளைப் பற்றிய **சத்** என்ற உண்மையும் **சித்** என்ற அறிவுத் தெளிவும், **சீவமுக்தி நிலை** என்னும் **ஆனந்த** நிலையையும் அடைய-முடியும் என்பதே அதன் சிறப்பு. **சச்சிதானந்தம்** என்பதும் இஃதே.

உலகில் வாழ்வதற்கு ஆசிரியர், ஞானி ஆகிய இருவரின் **வாழ்க்கை அனுபவ** அறிவால் முறையே உலகியல், அகவியல் அறிவுகளுடன் உலகில் வாழ்ந்து முடித்த பின் **பரமுக்தி நிலை** என்னும் **பேரானந்த நிலை** அடைய முடியும் என்பதும் தெளிவு.

எனினும் அறிந்து கொள்ள விரும்புவருக்கு அறியவேண்டும் என்ற ஆர்வமும், அறிவை கற்றுக் கொடுக்க விரும்புவருக்கு கற்றுக் கொடுக்கவேண்டும என்ற ஆர்வமும் இருக்கவேண்டும். அந்த இருவரில் ஒருவருக்கு ஆர்வம் இல்லாமல் இருந்தால் பயனேதுமில்லை.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

இதையே **உலகில் மனமகிழ்ச்சியாக வாழும் மனிதன் யார் என்றால், எவன் ஒருவன் பிறரது வாழ்க்கை அனுபவங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக்-கொள்கிறானோ அவனே மனமகிழ்ச்சியாக வாழும் மனிதன் என்பர்.**

*உதாரணமாக, நம் இல்லம் நோக்கி வரும் ஒருவரை, வருபவர் அவரா அல்லது இவரா என்பதை மனமானது முதலில் கண்களின் பார்வையால் அதாவது நான்காவது அறிவால் அறிகிறது. அவ்வாறு அறிந்ததை புத்தியின் உதவியால் உறுதி செய்ய முயற்சி செய்கிறது.*

*வருபவரைப் பற்றி புத்தியில் முன்பதிவு செய்யப்பட்டிருந்தால் வருபவரை ஒப்பிட்டு வருபவர் இன்னார் என அடையாளம் காட்டுகிறது. அவரின் பேச்சுக் குரலின் ஒலியைக் கொண்டு அதாவது ஐந்தாவது அறிவைக் கொண்டு புத்தி தனது முடிவை உறுதி செய்து ஆறாவது அறிவான மனதிற்கு உணர்த்துகிறது.*

*ஏழாவது அறிவான புத்தி உணர்த்துவதை மனம் ஏற்றுக்கொண்டு மனமகிழ்சியோடு,* ***ஐயா! வாருங்கள்*** *என்று அன்புடன் வரவேற்கிறது.*

*வருபவரைப் பற்றி புத்தியில் முன்பதிவு செய்யப்படாமல் இருந்தால் அவரைப்பற்றி எதுவும் தெரியாது எனப் புத்திக் கூறுகிறது. மனம் வருபவரை அறிந்து கொள்ள* ***ஐயா! தாங்கள் யார் நான் அறிந்துக் கொள்ளலாமா*** *எனக் கேட்கிறது.*

*அவரைப் பற்றியச் செய்திகளை நான்காம், ஐந்தாம், ஆறாம் அறிவுகளின் வாயிலாக அறிந்து புத்தியில் பதிவிடப்படுகிறது.*

*ஐந்தறிவுகளின் தூண்டுதலால்* **அது வேண்டும், இது வேண்டும்** *என ஏதாவது ஒன்றை எப்போதும் விரும்பி (எண்ணி) ஆறாவது அறிவான மனம் அதனை அடைய புத்தியிடம் அறிவுரை கேட்கிறது.*

*புத்தியானது தனது முன் அனுபவ அறிவால் அச்செயலால் வரக்கூடிய நன்மை தீமைகளை பற்றி மனதுக்கு உணர்த்தி தனது கடமையை எப்போதும் செய்கிறது.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

ஆனால் மனமோ ஆசையின் (புலங்களின் இச்சையின்) காரணமாக புத்தியின் அறிவுரையை ஏற்க மறுத்து தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள கர்ம இந்திரியங்களுக்கு கட்டளையிடுகிறது.

மனம் இட்ட கட்டளைளை ஏற்று சேவகர்களான கர்ம இந்திரியங்களும் செயல் புரிகின்றன. அதனால் நன்மைகள் நடந்தால் மனம் மகிழ்ச்சி (இன்பம்) அடைந்து துள்ளி குதிக்கிறது.

தீமைகள் நடந்தால் மனம் வருத்தம் (துன்பம்) அடைந்து துவண்டு சுருண்டு விடுகிறது.

**நன்மையும் தீமையும் பிறர் செய்ய வாரா** - என கணியன் பூங்குன்றன் கூறியதை நினைவு கூறத்தக்கது.

அவ்வாறு பிறரது வாயிலாகக் கேட்டு அறிந்தவைகள், நூல்களின் வாயிலாக படித்தறிந்தவைகள் பற்றி புத்தி அறிந்திருந்தால் அவற்றை மனதுக்கு சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்ய எப்போதும் தவறுவதில்லை.

ஆனால் மனமோ ஆசைக்கு அடிமைப்பட்டு, புத்தி உணர்த்து- வதை மறுத்து செயல்புரிவதால் பல முறை துன்பங்களை அனுபவித்து மனக்குழப்பத்திற்கும், மன அழுத்தத்திற்கும் உள்ளாகிறது.

மனக் குழப்பத்தால் புத்தியும் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுகிறது.

உண்மைகளை அறியமுடியாத காரணத்தால் சித்தமும் கலங்குகிறது.

ஆனந்தமற்ற வாழ்க்கை சூழ்நிலை உருவாகி, பிராணங்களும் தங்கள் செயல்கள் சரிவர செய்ய இயலாத நிலை ஏற்பட்டு உடலில் சூடும், மனநோய்க்கு உட்பட மனஉலைச்சல், மனஅழுத்தம் போன்ற அனைத்து நோய்களும் உண்டாகின்றன.

மனித வாழ்க்கை மீது உண்டாகும் வெறுப்புக்கும், தற்கொலைக்கும் காரணமாகிறது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*புத்தி உணர்த்தியதை ஏற்க மறுத்த மனதுக்கு கிடைத்த கேட்டறிவு, சுட்டறிவு, பட்டறிவு, கெட்டறிவு ஆகிய அறிவுகளின் வாயிலாக மனம் புத்தியின் உதவியால் சிந்திக்க துவங்கி புறப்பற்றாகிய ஆசையே அனைத்திற்கும் காரணம் என்பதையும், தன் புத்தியே உற்ற நண்பன் என்பதையும் மனம் உணர்கிறது. இதுவரை **அறியாமையில்** அகப்பட்டு சிக்கித் தவித்ததின் காரணத்தை அறிகிறது.*

*அதுஇது என்னும் அவாவினை நீக்கித்*

*துதியது செய்து சுழியுற நோக்கில்*

*விதியது தன்னையும் வென்றிட லாகும்*

*மதிமல ராள்சொன்ன மண்டலம் மூன்றே - திருமந்திரம் **1186***

*பொருள்: அதுவேண்டும், இதுவேண்டும் என்று கண்டதைப் பெற விரும்புகின்ற மனத்தின் ஆசைகளை விட்டொழித்து விட்டுப் பராசக்தியைப் போற்றிப் புகழ்ந்து பணிந்து, உள்ளத்து உள்ளே மனம் ஒன்றித் தியானத்தில் இருத்தி நிலைத்திருந்தால், விதியையும் வெல்லும் வல்லமை பெறலாம். மன மலராகிய செந்தாமரையில் வீற்றிருக்கின்ற மதிமண்டல நாயகி குறித்துச் சொன்ன மண்டலங்கள் திங்கள் மண்டலம், சூரிய மண்டலம், அக்கினி மண்டலம் ஆகிய மூன்றே ஆகும்.*

***அறியாமை அகல யோக மார்க்கமே சிறந்தது** என திருமந்திரம் உணர்த்துகிறது. எனவே **அறியாமையைப்** பற்றி விரிவாகக் காண்போமாக.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# அறியாமை

முன் கண்ட மனம், புத்தி ஆகிய இரண்டையும் அடுத்து எட்டாவது அறிவான **சத்** என்ற உண்மையும், ஒன்பதாவது அறிவான **சித்தம்** என்ற அறிவுத் தெளிவும், பத்தாவது அறிவான **ஆனந்தம்** என்ற நான் என்ற தன்னுணர்வும் உள்ளன **(சச்சிதானந்தம்)** என்பதை அறியாததே அறியாத்தன்மை என்னும் அறியாமை.

அந்த அறியாமைக்கு காரணம் மனதின் புறப்பற்று என்னும் ஒரு மாயத்திரை. அறியாமையை **மதில் மேல் உள்ள பூனையுடன்** ஒப்பிடலாம். புறப்பற்று, அகப்பற்று என்ற பற்றுக்கள் இரண்டு.

அதில் ஆறாம் அறிவான மனம் கீழான ஐம்புலன்களுடன் தொடர்புடைய ஐந்து அறிவுகளுடன் நட்புக்கொள்வது **புறப்பற்று.** மனமானது மேலான ஏழாம் அறிவான புத்தியின் துணையுடன் மேலான சத்து, சித்துடன் நட்புக் கொள்வது **அகப்பற்று.**

புத்தியும், சத்தும், சித்தமும், நான் என்ற தன்னுணர்வும் மனம் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்கு சாட்சியாக இருக்கின்றன.

எனினும் அவற்றால் தனித்து இயங்க இயலாது. அவை இயங்க வேண்டுமானால் மனம் புத்தி சொல்வதைக் கேட்டு ஒத்துழைத்தால் மட்டுமே அவை இயங்கி அறியாமை என்ற மாயத் திரை அகற்றப்படும்.

சற்று சிந்திக்கத் தெரிந்தவர்கள் ஆராய்ந்து அறியக் கூடிய உண்மை ஒன்று உள்ளது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

நாம் அறியாமையில் இருக்கிறோம் என்பது தான் அந்த உண்மை என்கின்றன மேன்மைதகு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய பழந்தமிழர்கள் அருளிய நான்மறைகள்.

நாம் கல்விக்கூடங்களின் வாயிலாக பெறுவது படிப்பறிவு. அந்தப் படிப்பறிவால் உலகில் உள்ளவற்றைப் பற்றி அறிந்துக் கொள்ளலாம்.

அவ்வாறு அறிந்துக் கொள்பவை எல்லாம் வெறும் தகவல்கள் மட்டுமே. அத்தகவல்களால் அறிவின் சிகரத்தைச் சென்று அடைந்தாலும் அது உண்மையான அறிவாகாது.

நாம் ஒவ்வொருவரும் **தன்னந்தனியாக நான் என்ற தன்னுணர்வை** பெறுவதே உண்மையான அறிவு. அதுவே ஞானம்.

அதுவே; பரம்மன் பேருணர்வுப் பொருள் ! நானே பரம்மனாக இருக்கிறேன் ! **நீ அது ஆனாய் !** இந்த ஆன்மாவே பரம்மன் ஆகிய பேருரை என நான்கு மறைகள் கூறுகின்றன. அதையே திருமந்திரமும் கூறுகிறது. அதுவானது:-

நீஅது ஆனாய் எனநின்ற பேருரை

ஆயது நான் ஆனேன் என்னச் சமைந்துஅறச்

சேய சிவமாக்கும் சீர்நந்தி பேரருள்

ஆயதுவாய் அனந்த ஆனந்தி ஆகுமே - திருமந்திரம் **2577**

பொருள்: நீ அது ஆனாய் (தத்துவமசி) எனக் குருமொழியாகக் கூறிய அறிவுரை. குரு உபதேசப்படி சீடனானவன், நான் அதுவானேன் என மனதுள் உறுதி கொண்டு, பந்தபாசப் பற்றுகள் விட்டு விலக, எட்ட முடியாத வெகுதொலைவில் உள்ளதாக எண்ணப்படும் சிவனை சீவனோடு பொருந்தச் செய்யும், மேலான நந்தியெம்பெருமானின் திருவருள், அதுவே உற்றத் துணையாக இருந்து முடிவற்ற பேரானந்தத்ததைச் சீவர்களுக்கு அருளும்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

நாம் யார்? நாம் எங்கிருந்து வந்தோம், நாம் செய்து முடிக்கவேண்டியவை எவை? இறுதியில் நாம் எங்கு சென்றடைய வேண்டும் என்பதை அறியாமலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நம்மில் பெரும்பாலானோர் இதை அறியாமலேயே மரணம் அடைந்தும் விடுகின்றனர்.

அவ்வாறு அறியாமையில் மரணம் அடைவதற்கு முன்னரே, **இறைவா! எம்மை அறியாமை என்ற இருளிலிருந்து அறிவின் ஒளிக்கு அழைத்துச் செல்வாயாக!** என்று இறைவனிடம் பிரார்த்தனை (வேண்டுகோள்) செய்ய வேண்டும் எனப் பிருஹதாரண்யக உபநிடதம் (1.3.28) கூறுகிறது.

இருளிலிருந்து அறிவின் ஒளிக்கு அழைத்துச் செல்வாயாக என்று இறைவனிடம் மன்றாடுவது ஓர் ஆரம்ப பிரார்த்தனை மட்டுமே. பிரார்த்தனை, ஜெபம், தியானம் போன்ற பல்வேறு சாதனைகள் மூலம் ஓர் ஒளியைக் காணமுடியும்.

அந்த ஒளியின் வசீகரத்தை உணர்த்த அந்த ஒளியை ஒரு மென்மையான திரை போன்றது எனவும், அந்த ஒளியின் வசீகரத்தால் சாதனையாளன் தன்னை இழந்து அங்கேயே நின்று விடுகிறான் எனவும் ஈசாவாஸய உபநிடதம் 5:15 கூறுகிறது.

ஆனால் உண்மை என்பது இருள் - ஒளி என்ற இரட்டைகளையும் கடந்தது. அந்த உண்மையை, உண்மைப் பொருளை, உள்ளது உள்ளபடி அறிய வேண்டுமானால் வசீகரமான ஒளியையும் கடந்து செல்லவேண்டும்.

அந்த வசீகரமான ஒளிமயமான காட்சியே அருள்மிகு அன்னையின் காட்சி.

அருள்மிகு அன்னையின் திருக்காட்சியைக் கடந்து செல்வதென்பது எளிதான செயல் அல்ல. அதற்கொரு உதாரணமான பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரம்மஹம்சரின் வரலாற்றுக் காவியம் பகுதி 1 பக்கம் 382 யில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்போமாக.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*தோதாபுரி என்ற முனிவரின் துணையுடன் ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஆன்மிகச் சாதனைகள் புரிந்து வந்தார். ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கு பல்வேறு உபதேசங்களை அளித்த தோதாபுரி முனிவர், இறுதியில் இருள் - ஒளி போன்ற இரட்டைகள் அனைத்தையும் கடந்த நிலையில் உண்மைப்பொருள் அனுபவத்தைப் பெறுமாறு கூறினார்.*

*ஸ்ரீ இராமகிருஷ்ணர் எவ்வளவு முயன்றும் அவரால் அதனைப் பெறமுடியவில்லை. ஏனெனில் மனம் அகமுகமானதும் அன்னையின் ஒளிமயமான அக்காட்சி அவர்முன் எழுந்தது. அதனால் அந்தப் பேரொளியைக் கடந்து செல்ல அவரால் முடியவில்லை.*

*தன்னம்பிக்கையை இழந்த நிலையை உணர்ந்த அவர் தமது இயலாமையை முனிவரிடம் தெரிவித்தார். இறுதியில் தோதாபுரி முனிவரின் அருளால் அவர்* ***தன்னம்பிக்கையுடன் (தன்னால் முடியும் என்னும் மன உறுதியுடன்)*** *ஒளியைக் கடந்து சென்று, உண்மைப் பொருளுடன் ஐக்கியமாகின்ற நிலையை அடைந்தார்.*

*அறியாமை என்ற இருளிலிருந்து ஞான ஒளிக்கும் அதிலிருந்து உண்மைப் பொருளுடன் ஐக்கியமாவதற்கான வழியை காட்டுபவர்களே தோதாபுரி போன்ற இறைத் தூதர்களான* ***ஆன்மிகக் குருமார்கள்.*** *அத்தகைய ஆன்மிகக் குருமார்களில் ஒருவர்* ***திருமூலர்.*** *அவர் அருளிய இரண்டு திருமந்திங்களைக் காண்போமாக.*

*அறிவு அறிவுஎன்று அங்குஅரற்றும் உலகம்*

*அறிவு அறியாமை யாரும் அறியார்*

*அறிவு அறியாமை கடந்து அறிவானால்*

*அறிவு அறியாமை அழகிய வாறே - திருமந்திரம்* ***2362***

*பொருள்: திருவருள் நாட்டமாகிய அறிவைப் பெற முயலாமல், அறிவு அறிவு என்று உலகம் வீணே புலம்பிக் கொண்டிருக்கிறது.* ***அறிவு எது, அறியாமை எது?*** *என்று இவர்கள் யாரும் அறியமாட்டார்கள்.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

இப்படிப்பட்ட ஆருயிர்கள் அறிவு (தண்முனைப்பு), அறியாமை (இறையருள் உணராமை) இரண்டும் கடந்த பரம்பொருள் நினைவில் ஒன்றினால், ஆன்மாக்கள் அடைய வேண்டிய அறிவின் அழகும் (லட்சணமும்), அடையப் பெற்றிருந்த அறியாமையின் அழகும் (அவலட்சணமும்) எப்படிப் பட்டது என்பது புரியவரும்.

*அறிவு அறியாமையை நீவி யவனே*

*பொறிவாய் ஒழிந்து எங்கும் தானானபோது*

*அறிவாய் அவற்றினுள் தானாய் அறிவின்*

*செறிவாகி நின்றவன் சீவனும் ஆமே - திருமந்திரம் **2363***

பொருள்: **அறிவு எது? அறியாமை எது?** என்பதைப் புரிந்து கொண்டு அறியாமையை விட்டொழித்துவிட்டு பொறிபுலன்கள் வழிச் செல்லும் ஆசைகளை வெறுத்தொதுக்கி எங்கும் தானாக உணருகிற ஆன்மநேயம் அடைகிறபோது, அந்த ஆன்மநேயமே அறிவாய், அதில் கலந்த தானே ஆன்ம நேயனாக இருக்கப் பெற்றால், அவனே இந்த சிவஞானத்தில் பொருந்தி நின்ற சீவனும் ஆவான்.




© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# சிவப் பரம்பொருளே ஞானகுரு

ஒளியைக் கடந்து உண்மைப்பொருளை அறிவதற்கு முன் ஓர் ஆன்மிகக் குருவின் உதவி அவசியம் தேவை. அதாவது ஓர் ஆன்மிக குருவிடமிருந்து தீட்சை (அறிவுரை) பெறவேண்டும்.

தீட்சை என்பதற்கு சிவஞானத்தைக் கொடுத்து மலமாயா கர்மங்களை கெடுப்பது என்றுப் பொருள். தீட்சை பெறுவதால் சித்தம் என்ற முடிவான ஒரு மனக்கொள்கையை பெறலாம்.

ஓர் ஆன்மிகக் குருவிடமிருந்து தீட்சை பெறாமல் சித்தம் பெற முயற்சிப்பதை முகவரி எழுதப்படாத ஒருக் கடிதம் எவ்வாறு உரியவருக்குப் போய் சேராதோ அத்துடன் ஒப்பிட்டு காட்டலாம்.

ஆன்மிகக் குருமார்களைப் பற்றியும் அவர்கள் அருளும் மூன்று தீட்சைகளைப் பற்றியும் கைவல்ய நவநீதம் (கரு) கூறுவதாவது;

அன்னதன் சிசுவை யைய னாமைமீன் பறவை போலத்

தன்னகங்கருதி நோக்கித் தடவிச்சந் நிதயிருத்தியுன்னது

பிறவி மாற்று முபாயமொன்றுண்டு சொல்வேன் சொன்னது

கேட்பா யாகிற் றொடர்பவந் தொலையுமென்றான்

ஆமை தானிட்ட முட்டைகளை துரத்திலிருந்த போதிலும் அது நினைத்த மாத்திரத்தில் குஞ்சுகளாக்குவது போல (அந்தக் கரணம் முக்கியம்) ஞானக் குருவானவர் தன் சீடனைக் (மாணவனைக்) கிருபையோடு நினைத்த மாத்திரத்தில்

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அவனது பிறவித் துன்பம் நீங்கும் என்பர். இதற்கு **மானச தீட்சை** என்றுப் பெயர்.

மீன் தன் கருக்களை இட்டபின் அவற்றை அது திரும்பி பார்த்த மாத்திரத்தில் அவற்றை குஞ்சுகளாக்குவது போல் (ஞானேந்திரியம் முக்கியம்), அருட்குருவானவர் தன் சீடனை நோக்கின மாத்திரத்தில் அவனது பிறவித் துன்பம் நீங்கும் என்பர். இதற்குச் **சட்சு தீட்சை** என்றுப் பெயர்.

பறவை தன் முட்டைகளை அணைத்துத் தடவுதலால் குஞ்சுகளாக்குவது போல் (கர்மேந்திரியம் முக்கியம்), அருட் குருவானவர் தன் சீடனை அஸ்தமஸ்தக சையோகம் செய்வதால் பிறவித் துன்பம் நீங்கும் என்பர். இதற்கு **ஸ்பரிச தீட்சை** என்றுப் பெயர்.

எல்லா அறிவும் நம்முள் இருக்கிறது என்பதும் உண்மையே. ஆனாலும் அதனை வெளிக்கொண்டு வருவதற்கு மற்றொரு அறிவு வேண்டும்.

அறிவதற்கான எல்லா திறமைகள் நமக்குள் இருக்கின்றன என்றாலும் அவற்றை வெளிக்கொண்டு வர மற்றொரு அறிவால் மட்டுமே முடியும் என்கின்றனர் ஆன்மிக குருமார்கள்.

அதாவது அறிவை வெளிபடுத்த மற்றொரு அறிவு வேண்டும் என்பதும், அது நம்முள் இருப்பதை விழிப்புணர்த்தவே நாம் ஆன்மிக குருமார்களின் உதவியை நாடவேண்டும் என்பதே அதன் உட்பொருள்..

நல்ல ஆன்மிகக் குருமார்கள் நமக்கு எப்போதும் தேவை. அவர்களின் உதவி இல்லாமல் எந்த ஞானமும் வராது. எல்லா குருமார்களுக்கும் சிவப் பரம்பொருளாகிய இறைவனே ஞானகுரு.

ஏனெனில் ஞானகுருமார்கள் மேலானவர்களாக இருந்தாலும், ஏன் தேவ தூதர்களாக இருந்தாலும் கூட அவர்கள் காலத்தால் கட்டுப்பட்டவர்கள்.

ஆனால் சிவப் பரம்பொருளாகிய இறைவனே காலம், இடம், காரண காரியம் அனைத்திற்கும் அப்பாற்பட்டவர் என்கிறார் வீரத்துறவி சுவாமி விவேகானந்தர்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*மேலும்* ***சிவப் பரம்பொருளாகிய இறைவனே நம் அனைவருக்கும் ஞானகுரு*** *என நந்தியெம் பெருமான் சொல்லியதாகத் திருமூலர் அருளிய திருமந்திரம் கூறுகிறது.*

*குருவே சிவம்எனக் கூறினன் நந்தி*


*குருவே சிவம்என்பது குறித்து ஓரார்*

*குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்*

*குருவே உரைஉணர்வு அற்றதோர் கோவே - திருமந்திரம் 1581*

*சிவப் பரம்பொருள் தான் ஞானக் குருநாதன் என்று சொல்லி அருளினான் நந்தியெம் பெருமான். ஆனால் சிவப் பரம்பொருளே ஞான குரு என்பதை இன்னும் பலர் அறியாதிருக்கின்றார்களே (என்னே அறியாமை) குருநாதன்தான் சிவப் பரம்பொருளாகவும், சீவர்களுக்கு எல்லாம் மேலான தலைவனாக, உலகை ஆட்சி செய்பவனுமாய் இருக்கிறான். ஞானக் குருநாதனாகிய சிவப் பரம்பொருள் வாக்கும் மனமும் கடந்து நிற்கின்ற தலைவனுமாம்.*

*7500 ஆண்டுகளுக்கும் முற்பட்டச் சிந்து சமவெளி நாகரிக முத்திரைகளில் பரம்மஞானத்தைக் குறிக்கும் குறியீடு ஒத்தக்கொம்பன் / ஒக்கோடு நந்தியுடன் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.*



© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# பரம்ம ஞானி

பரம்மஞானி என்பவர் ஒரு பெண்ணுக்கு உண்மையான கணவனாக இல்லற தர்மத்தைக் கடைபிடித்து வாழ்ந்து, தமது சந்ததியரை பெற்றெடுத்து, பிறவிக் கடமைகளான உழவு, தொழில், வரைவு, வாணிகம், விச்சை, சிற்பம் ஆகிய அறுவகையான கர்மாக்களை எவ்வித குறைவும் இன்றி (கர்மசுத்தியாக) செய்து முடித்து, கர்மமுக்தி அடைந்து, யோக மார்க்கத்தைக் கடை பிடித்து வாழ்ந்து, உயிரின் ஐந்து நிலைப்பாடுகளான **விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம், துரியம், துரியாதீத நிலை** எனப் படிப்படியாக உயர்நிலையடைந்து (சீவமுக்தியடைந்து) **அம்சப் பறவையாக** பிரபஞ்சம் முழுவதும் இறைவனின் அருவுருவமாக நீக்கமற நிறைந்துள்ளதை உள்ளது உள்ளபடி உணர்ந்தவராவார்.

பரம்மஞானிகள் நெற்றியில் திலகம் ஏதும் இடாத வராகவும், ஆடை ஏதும் அணியாதவராகவும், குளிர் - வெப்பம், சகம் - துக்கம், இன்பம் - துன்பம், மானம் - அவமானம் ஆகிய இரட்டைகளை வென்றவராகவும், லோகப்பற்று, தேகப்பற்று, சாத்திரப்பற்று ஆகிய மூவகைப் பற்றுக்கள் அற்றவரே பரம்மஞானியாவார்.

அதாவது **தாமரை இலையில் ஒட்டாத நீரைப் போல**, நிந்தை, புகழ், பொறாமை, வெகுளி, மகிழ்ச்சி, கர்வம், கோபம், திமிர், பகை, தற்காப்பு, ஹோமம், மாச்சரியம், இடம்பம், காமம் ஆகிய அனைத்தையும் துறந்ததொரு அன்புடையவராக ஒரு நடைப்பிணம் போல், கிடைத்ததை உண்டு வாழ்பவர்களே பரம்மஞானியாவார். அத்தகைய பரம்மஞானிகளை காண்பது அரிது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

பரம்மஞானிகள் பிராணனை தாங்கியவராய், தம்முள் உள்ள உயிராகிய ஆன்மாவே அனைத்து ஜீவராசிகளிடம் உள்ளது என்பதை உணர்ந்த **மலர்ந்த ஆயிரம் தாமரை இதழ்களுக்கு ஒப்பான பொலிவுடன், தெய்வீக இரகசியத்தை அறிந்த ஒரு சித்தனாக** சமபுத்தியுடன், குழந்தை, பித்தன் போல மனஉறுதியுடன் வாழ்ந்து இறுதியில் சாயுச்சியம் என்னும் ஆன்மா கடவுளிடம் ஒன்றும் நிலை அடைவர் என நம் முன்னோர்கள் முழங்கினர்.

பரம்மஞானி யாரேனும் ஒருவர் காணப்படுபவராயின் அவர் அம்சப் பறவை போல மலர்ந்த ஆயிரம் தாமரை இதழ்களுக்கு ஒப்பான பொலிவுடன், தெய்வீக இரகசியத்தை அறிந்தவராகக் காட்சியளிப்பார் என்பதை உபநிடதங்கள் உறுதிசெய்கின்றன. பரம்ம ஞானிகளைப் போற்றிப் பாராட்டுவதன் பயனை பற்றி திருமந்திரம் கூறுவதாவது,

ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே

ஞானியை வந்திப் பவனுமே நல்வினை

யான கொடுவினை தீர்வார் அவன்வயம்

போன பொழுதே புகுஞ்சிவ போகமே -திருந்திரம் 538

பொருள்: சிவயோகத்தவாரகிய பரம்மஞானியை பழிச் சொல் சொல்லி ஏசுபவர் நல்லெண்ணம் இல்லாதவராவர். ஞானிகளைப் போற்றிப் பாராட்டுபவன் நல்வினைப் பயனான இன்பத்தை அடைவர், தீவினைகளில் இருந்து விடுபடுவர். மேலான தவமுடைய ஞானிகளை அடைந்த உடனேயே அவர்களுக்கு சிவபோகமாகிய (பேரின்பம்) சித்திக்கும்.



வலமிருந்து இடமாக: விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம், துரியம், துரியாதீதம் ஆகிய ஆன்மாவின் ஐந்து நிலைப்பாடுகளை குறிக்கும் கீழ்வாலை பாறை ஓவியம். **துரியாதீதம் குறியீடு கொண்ட பானை ஓடு ஒன்று கீழடி அகழாய்வின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# மெக்சிகன் குறியீடு

*பிறநாடுகளில் காணப்படும் குறியீடுகள் மற்றும் பாறை ஓவியங்கள் பற்றி யாம் மேற்கொண்ட ஆய்வுகளின்போது நம் இந்தியத் திருநாட்டிற்கே உரித்தான ஆன்மிகத் தத்துங்கள் உள்ளடங்கியுள்தை அறிந்தோம்.*

*அதற்கொரு சான்றாக மெக்சிகோ (மெகிக்கோ) நாட்டைச் சார்ந்த மெக்சிகன் குறியீட்டைப்பற்றியும் காண்போமாக.*


*அக்குறியீடு* **தோ** *என்றப் பெயரில் பிரிட்டன் நாட்டிலுள்ள ஒரு அருங்காட்சியகத்தில் எம்.எஸ்: 2782 என்ற அடையாள எண்ணுடன் பாதுகாக்கப்படுகிறது.* **தோ** *என்பது ஞானத்தைக் குறிக்கும் ஒரு சொல்.*

*இக்குறியீட்டில், இரண்டு கிளைகளும், ஆறு உபகிளைகளும் ஐம்பத்தொரு அரும்புகள் கொண்ட இலைகளும் உடைய ஒரு மரம் உள்ளது.*

*அம்மரத்தின் வேர்கள்* **ஐந்து உருளை***களாகவும், அம்மரத்தில் பத்து பழங்கள் காய்த்துத் தொங்குகின்றன். அம்மரத்தின் மேல் பகுதி வெள்ளை நிறமாகவும் (சிவமாகவும்), கீழ்பகுதி சிவப்பு நிறமாகவும் (சக்தியாகவும்) சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.*

*அம்மரங்களில் காய்த்துத் தொங்கும் பழங்களை இரண்டு (ஆண், பெண்) மனித உருங்கள் பறிக்க முயற்சிப்பது போலவும், மரத்தின் உச்சியில் அமர்ந்து பழம் தின்னாத பறவை ஒன்று அதனைப் பார்த்துக் கொண்டிப்பது போன்றும் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022



ஐந்து வேர்களான ஐந்து உருளைகள் அன்ன, பிராண, மனோ, விஞ்ஞான, ஆனந்த மயகோசங்கள் ஆகும்.

51 அரும்புகள் அன்னையின் 51 அச்சரங்களையும், வெண்மை நிற மேல்பகுதி சிவத் தத்துவத்தையும், சிவப்பு நிறம் கீழ்பகுதி சக்தி தத்துவத்தையும் குறிப்பதாகக் கருதலாம்.

பத்துப் பழங்களில் பத்து என்பது **வேண்டலுறும் பொருட்கண் செல்லும் விருப்பம், விருப்பம், பொருளாசை, காமவிச்சை, அன்பு, பேற்றில் நம்பிக்கை, பொன்னாசை. திசை, பொன்னூமத்தை** ஆகிய பத்துவிதமான ஆசைகளை சுட்டிக் காட்டுவதாகக் கருதலாம்.

வெள்ளை, கருப்பு நிறமுடைய இரண்டு மனித உருங்கள் ஆணாகவும், பெண்ணாகவும் புறப்பற்றுள்ள ஜீவாத்மாவை உணர்த்துவதாகும். மரத்தின் உச்சியில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் பறவை பரமாத்மாவைக் (சிவப் பரம்பொருளைக்) குறிக்கும்.

மெக்சிகோ நாட்டின் குறியீடு மாயா இனைத்தைச் சார்ந்த குய்ச்சி மக்களைச் சார்ந்தது என்பதை அறியும்போது முன்கண்ட முண்டக உபநிடதம் கூறும் நிஜமும், நிழலும் என்ற தத்துவத்தைப் பற்றி நம் இந்தியத் திருநாட்டினர் மட்டுமில்லாமல் பிற நாட்டினரும் நன்கு அறிந்துள்ளனர் என்பதும் தெரியவருகிறது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# *நிறைவுரை*

***திருவானக்கா திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள தாயே ! அகில உலக நாயகியே! அகிலாண்ட ஈசுவரியே! இவ்வுலகில் பெரும் பாலோர்க்கு ஆன்மிக இதயம் ஒரு மலராத அரும்பாகவே உள்ளது.***

***அதனை மலரச்செய்ய அருள்புரியவேண்டும் தாயே!*** *என அன்னையை மனமார வேண்டி வணங்கி, பரம்மஞானி பதவியை அடையச் செய்யும் ஆன்மிக ஞானமார்க்கத்தை அன்னைக்கு உபதேசித்த சிவப் பரம்பொருளை ஞான குருவாக ஏற்றுக்கொள்வோமாக!*

*அவ்வாறு ஏற்றுக்கொள்வதன் வாயிலாக அறியாமை என்னும் மாயா திரையை அகற்றி, நம் உடலில் குடிகொண்டுள்ள ஆத்ம சோதியை தரிசனம் செய்வோமாக! மனவருத்தம், மனமகிழ்ச்சி என மாறி மாறி வரும் நிலையற்ற உலகவாழ்க்கை என்றப் பிறவிப் பெருங்கடலை ஆத்மஞானம் என்னும் கட்டுமரத்தில் ஏறிக் கடந்து கரை சேர்ந்து பேரானந்தம் அடைவோமாக!*

*ஆத்மாவும் (சீவனும்) பரமாத்மாவும் (சிவமும்) ஒன்றே. சீவன் வேறு சிவம் வேறு என்று எண்ணாமல் தானே சிவம் என்னும் ஞானத்தை (ஞானோதயத்தை) அடையப் பெறுவோமாக!*

*பேச்சுக் கட்டுப்பாடே ஆன்மிக வாழ்வுக்கு முதல் படி என்றார் ஆதி சங்கரர். எனவே தேவை இல்லாத பேச்சுக்களையும், வாத விவாதங்களை முற்றிலும் தவிர்ப்போமாக!*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

**ஓம்** என்பதை வில்லாகவும், ஆன்மாவை அம்பாகவும், அங்கும் இங்கும் அலைபாயும் மனதை நாணாக்கி, அதனை வில்லில் சரியாகக் கட்டி அதனை இழுத்து, ஆன்மாவையும் பரமாத்மாவையும் நேர்கோட்டில் அமர்த்தி, பரமாத்மாவே இலக்கு என அதனைக் குறிபார்த்து எறியப்படும்போது ஆன்மாவாகிய அம்பானது பரமாத்மாவில் நிலைத்து நிற்கும் என முண்டக உபநிடதம் 2:2.4 கூறுகிறது.


**சிவகங்கை மாவட்டம் கீழடியில் தமிழகத் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட ஒரு பானை ஓட்டில் பொறிக்கப்பட்டுள்ள வில் அம்புக் குறியீட்டின் உட்பொருளும் அஃதே ஆகும்.**

அவ்வாறே நாமும் நம்மனதை ஒருநிலைப்படுத்தி புத்தியின் உதவியுடன் ஆன்மாவை பரமாத்மாவிடம் சென்றடையச் செய்வோமாக! எப்போதும் நிலையான **சத்** என்ற உண்மையையும், **சித்** என்ற அறிவையும் பெற்று **ஆனந்தம்** அடைவோமாக! அதாவது **சச்சிதானந்த** நிலை எனும் இறைநிலையை அடைந்து மாணிக்க மணி ஒளி போன்ற சிவப் பரம்பொருளின் திருச்காட்சியைக் காண்போமாக!

வில்லின் விசை நாணில்கோத்து இலக்குஎய்தபின்
கொல்லும் களிறைந்தும் கோலோடு சாய்ந்தன
இல்உள் இருந்துஎறி கூரும் ஒருவர்க்குக்
கல்கலன் என்னக் கதிர் எதிராமே - திருமந்திரம் 2567

ஓம் எனும் பிரணவமாகிய வில்லில், நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை நாணாகக் (கயிராகக்) கட்டி, அம்பாகிய சிவனை அதிலே பொருத்தி, இறையருளாகிய ஞானத்தைக் குறி வைக்க, கொல்லவரும் மதயானைகள் ஐந்தான மெய், வாய், கண், காது, மூக்கு என்னும் ஐம்பொறிகளும் செயலற்று விழுந்தன. இப்படி மனம் வாக்கு செயலற்று, சித்தம் (மனக்கொள்கை) சிவசிந்தனையில் பொருந்தி இருக்கும் ஒருவர்க்கு, கல்கலன் என்னும் மாணிக்க மணி ஒளி போல சிவப் பரம்பொருள் எதிர்பட்டுவரும்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022



*(படம்: கீழ்வாலை பாறை ஓவியம்)*

*சிவப் பரம்பொருளாகிய இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் பேரின்ப மகிழ்ச்சி என்னும் ஞானசுகத்தை பெறுவதற்கான உயர்அறிவை போதிக்கும் பழந்தமிழர் வாழ்வியலைச் சார்ந்த திருவானைக்கா திருக்கோயில் ஆத்மசோதி குறியீட்டையும், ஆடுபுலி விளையாட்டையும், அவற்றைப் பற்றிக் கூறும் திருமந்திரம், திருக்குறள், கைவல்லிய நவநீதம் போன்ற ஆன்மிக நூல்களையும், பாறை ஓவியங்களையும் மறையாமலும், அழிந்துவிடாமலும் பாதுகாப்போமாக!*

***பழந்தமிழர் வாழ்வியலை உலகறிய செய்வோமாக!*** என்றப் பணிவான வேண்டுகோளுடன்; ஆடவல்லான் அருளால், தமிழ் கூறும் நல்லுலகம் மகிழ, தமிழோர்களாகிய நாம் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வோமாக!

மேலும், ஆய்வாளர் எஸ்.குமரன் அவர்கள் கண்டுபிடித்த சேலம் மாவட்டம், கிருட்டிணகிரி, பர்கூர் வட்டம், வெங்கடபுரம், கல்யாணக்குகை **சிறப்பு மூகரத்தைக் குறிக்கும்** ஏணி மரம் பாறை ஓவியத்தை இரண்டு திருமந்திர பாடல்களுடன் ஒப்பிடுவோமாக!



© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*ஆய்ந்துகொள் வார்க்கரன் அங்கே வெளிப்படும்*

*தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்*

*ஏய்ந்த இளமதி எட்டவல் லார்க்கு*

*வாய்ந்த **மனமல்கு நூலேணி** ஆமே- திருமந்திரம் **296***

*பொருள்: ஆராய்ந்து ஞானக்கல்வி நன்கு அடையப் பெற்றவர்களுக்கு அகத்துள் சிவக்காட்சி தெரியும், உள்ளத்தில் தோய்ந்த தூயமணிபோல் ஒலிவீசித் திகழும். இவ்வாறு சோதியின் ஒளியும், சிவக்காட்சியம் சித்திக்கப் பெற்றவர்களுக்குப் பக்குவப்பட்ட **மனம் ஏணிபோல் இருந்து** அவர்களை மேன்மை அடையத் துணை செய்யும் என்பதை,*

*அறிந்துஉணர்ந்தேன் இவ்அகல் இடம் முற்றும்*

*செறிந்துஉணர்ந்து ஓதித் திருவருள் பெற்றேன்*

*மறந்துஒழிந்தேன் மதி மாண்டவர் வாழ்க்கை*

*பிறிந்துஒழிந்தேன் இப்பிறவியை நானே - திருமந்திரம் **1588***

*பொருள்: விரிந்து பரந்த இவ்வுலகம் முழுவதும் சுற்றிப்பார்த்து, நான் என் அறிவாலும், அனுபவத்தாலும் ஒன்றை முற்றாக உணர்ந்து கொண்டேன். எனவே அந்தச் சிவப் பரம்பொருள் சிந்தனையில் மூழ்கித் திளைத்து, அவனைத் தியாணித்து, அவனருள் கைவரப்பெற்றேன். அறிவு கெட்ட மக்கள் நிசம் என்றும், நிலையென்றும் நம்பி வாழும் இப்பொய்யுலக வாழ்வை விலக்கி விட்டொழித்தேன். இதனால் இனிப் பிறந்திருக்கும் இப்பிறவித் துன்பமும் தான் நீங்கப் பெற்றவன் ஆனேன்.*

*தமிழ் மண்டலம் ஐந்தும் தாவியஞானம்*

*உமிழ்வது போல் உலகம் திரிவார்*

*அவிழும் மனமும் எம்ஆதி அறியும்*

*தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவம் ஆமே-திருமந்திரம் **1646***

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

*பொருள்: உலகில் ஐந்து தமிழ் மண்டலங்ளிலும் அதாவது குறிஞசி, முல்லை, பாலை, நேய்தல், மருதம் ஆகிய ஐந்து நிலங்களிலும், தமிழ் ஞானமாகிய திருமறைகள் உபதேசித்து அருள,அனைத்து உலகிலும் அலைந்து திரிவர் ஞானிகள். அத்தகையோர் மனம் விரிக்கும் மேலான மெய்யறிவு தமிழ்மண் தந்த மேலான அறச் செல்வமாகும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு தமிழ் மறைகளின் புகழ் தரணிக்கெல்லாம் பரவ, அருளுரை செய்தவர்கள் ஞானிகள் என்பதை சிவப் பரம்பொருள் அறியும்.* **தமிழ் மண்டலம் ஐந்தும் மெய்பொருள் ஆகுமே.**

*அவ்வாறே நாம் அனைவரும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு தமிழ்த் திருமறைகளை நன்கு கற்றறிந்து இப்பிறவித் துன்பம் நீங்கப் பெறுவோமாக! எனத் திருவானைக்கா ஆத்மசோதி குறியீடும் ஆடுபுலி விளையாட்டும் என்னும் இந்நூலை நிறைவு செய்வோமாக!*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# துணை நூல்கள்

*01.* *மொழி பெயர்ப்பு சபாரத்தினம், ஐந்திரம்*

*02.* *சுவாமி ஆசுதோஷானந்தர், மாண்டூக்கிய உபநிடதம்*

*03.* *சுவாமி ஆசுதோஷானந்தர், பிரச்ன உபநிடதம்*

*04.* *ச.வே.சுப்பிரமணியன், மெய்யப்பன் தமிழ் அகராதி*

*05.* Asko Parpola, C.I.S.I volume one

*06.* *ஞா.மாணிக்கவாசகன், திருமந்திரம் மூலமும்-விளக்க உரையும்*

*07.* *சுவாமி ஆசுதோஷானந்தர், முண்டக உபநிடதம்*

*08.* *தாண்டவராயர் சுவாமிகள், கைவல்லிய நவநீதம் மூலமும் உரையும்*

*09.* Swami Vivekanandar A study of the Mundaka Upanishad

*10.* *சுவாமி ஆசுதோஷானந்தர், பிருகுதாரண்யக உபநிடதம்*

*11.* *சுவாமி ஆசுதோஷானந்தர், ஈசாவாசிய உபநிடதம்*

*12.* Translated by Bruno Dagens, Matamata

*13.* *ஸ்ரீசக்தி மஹிம்ன ஸ்தோத்திரம்*

*14.* Secret Mysteries of the Maya and Quiches

*15.* *சுபாஸ் சந்திர போஸ், ராம்குமார், பாலகிருட்டிணன் தொ(ல்)லியல் அந்தரங்கம்*

*16.* *தி.லெ. சுபாஸ் சந்திர போஸ், ஆத்மஜோதி குறியீடும் ஆடுபுலி விளையாட்டும்-முதல் பதிப்பு (2004).*

*17.* *சுவாமி ஆசுதோஷானந்தர், தைத்திரீய உபநிடதம்.*

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022